விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI
சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 28 புதன்கிழமை (12.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 83

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க புலிகள் தயாரில்லை

# பதினொரு விடுதலைப் புலிகளின் வீரச்சாவு

# பேச்சுக்களில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்

### நீதிமன்ற திறப்பு விழாவில் பாலசிங்கம் எச்சரிக்கை

(அலுவலக நிருபர் டொறிங்டன்)

**கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாக விடுதலைப் புலிகளினால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த யுத்த நிறுத்த உடன் படிக்கையை மீறும் வகையில் இலங்கைக் கடற் படையினர் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை மூழ்கடித்து 11போராளிகளைக் காவு கொண்ட சம்பவமானது தற்போதைய சமாதானமுன்னெடுப்புக்களில் பாரதூர மான விளைவுகளை ஏற்படுத்தும்.எனினும் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாரில்லை என நேற்று நடை பெற்ற நீதி மன்றத்திறப்பு விழாவில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.**

தமிழீழ நீதிமன்ற வளாகத்தினை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் காலை 10மணியளவில் கிளிநொச்சியில் திறந்து வைத்தபோதே மேற்கண்டவாறு வற்புறுத்திக் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி,நிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவின் போது முதன்மைச் சுடரினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றி வைத்தார்.தமிழீழ தேசியக் கொடியை காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார்.தமிழீழ நீதி மன்ற வளாகப்பெயர்ப் பலகையை தமிழீழ நிதித் துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் திரைநீக்கம் செய்து வைத்தார்.இதனையடுத்து மாவட்ட (10ம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்றைய தினம் இடம் பெற்ற நீதிமன்ற வளாகத் திறப்பு விழாக் காட்சிகள்....

### கண்காணிப்புக்குழு இன்று வன்னி செல்லும்

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்தக் கண் காணிபபுக் குழுவின் புதிய தலைவர் ரெலிவ்ஸன் தலைமையிலான குழுவினர் இன்று வன்னி செல்லவுள்ளனர்.

வன்னி செல்லும் இக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்து திருகோணமலையில் நடை பெற்ற அசம்பாவித சம்பவம் குறித்து ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

### கடற்படையினர் கப்பலை மறித்தவுடன் எம்மை அழைக்காதது கவலையளிக்கிறது

#### கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஆதங்கம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கப்பலை மறித்தவுடன் இலங்கைக் கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் தந்து கண்காணிப்பாளர் ஒருவரை கப்பலுக்கு அழைத்துச் சென்று நிலைமையைக் கண்காணிக்கும் படி கோராதது தமக்கு மிகுந்த கவலையளிப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ் விடயம் பற்றி நாங்கள் பாதுகாப்பு அமைச்சிடமும் கடற்படைத் தளபதிகளுடனும் பேச்சு நடத்தியுள்ளோம்.

சம்பவ தினத்தன்று இலங்கைக் கடற்படை ஏதோவொரு கப்பலை (10ம் பக்கம் பார்க்க)

### சந்திரிகா - ரணில் நேற்று சந்தித்து பேசினர்

(கொழும்பு)

திருகோணமலை கடற்பகுதியில் சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலகளின் வர்த்தகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பாகவும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

ஜனாதிபதியுடனான இச்சந்திப்பின் போது பிரதமர் அரசின் சமாதான முயற்சி குறித்து விளக்கிக் கூறியுள்ளார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

## புலிகளின் தலைமையை முஸ்லிம் எம்.பிக்கள் குழு சந்தித்துப் பேசும்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித் தரப்பாகக் கலந்து கொள்வது குறித்து ஆராய முஸ்லிம் பாராளுமன்றக்குழு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்ற போதே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் பாராளு மன்றக் குழுவின் செயலாளருமான எம்எல்ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்

விடுதலைப் புலிகளின் தலைமைப் (10ம் பக்கம் பார்க்க)

## கைதிகளை வட-கிழக்கு சிறைக்கு மாற்ற சட்டமா அதிபர் சம்மதம்

### விநாயகமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை அவர்களின் சொந்தப் பிரதேசங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபர் கமலசபேசன் சம்மதம் தெரிவித்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபர் கமலசபேசனை (10ம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணம்-மன்னார்-வவுனியா புலிகளின் அரசியல் பிரிவினர் வன்னி செல்கின்றனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்,மன்னார்,வவுனியா ஆகிய இடங்களில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வன்னி திரும்பிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.விடுதலைப புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நடத்தவுள்ள விஷேட கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே வன்னி திரும்புவதாகத தெரிவிக்கப்படுகின்றது. (10ம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் தொண்டர் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்

### யாழ்.வந்த கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(காரைநகர்)

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியெய்திய ஆயிரம் பேர் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படவுள்ளனர்.இதன்போது தொண்டர் ஆசிரியர்களும் விண்ணப்பித்தால் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

இவ்வாறு பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அமைச்சர்,காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடை பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், நாட்டில் கல்விச் சேவையில் ஆசிரியர் மற்றும் ஆளணிப்பற்றாக் குறை பெரும் பிரச்சினையாகவே உள்ளது.தற்போது ஆயிரம் (10ம் பக்கம் பார்க்க)




# இலங்கை அணியின் தலைவிதியை நிர்ணயிக்கும் இன்றைய ஆட்டம்

உலகக் கிண்ண சுற்றுப் போட்டியில் இலங்கை அணி அரையிறுதிப் போட்டிக்கு செல்லுமா என்ற நிலையை இன்று நடைபெறவுள்ள சிம்பாப்வே - கென்ய அணிகளுக்கிடையிலான போட்டி நிர்ணயிக்க உள்ளது.

இன்றைய போட்டியில் கென்ய அணி வெற்றி பெறுமானால் அரையிறுதிச் சுற்றில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுவிடும். சிம்பாப்வே அணி அரையிறுதிப் போட்டியில் விளையாட வேண்டுமாயின் இன்று கென்யாவுடனான போட்டியிலும் 15ம் திகதி நடைபெறவுள்ள இலங்கையுடனான போட்டியிலும் வெற்றிபெற வேண்டும்.

சிம்பாப்வே கென்ய அணிகளைப் பொறுத்த வரையில் இரு அணிகளும் திறமையாக விளையாடக் கூடியவை. எனினும் சிம்பாப்வே கென்யாவுடனான போட்டிகளில் கூடுதலான சந்தர்ப்பங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை அணி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட வேண்டுமாயின் இன்றைய போட்டியில் கென்யா அணி சிம்பாப்வேயிடம் தோல்வியடைய வேண்டும். அத்துடன் எதிர்வரும் 15ம் திகதி நடைபெறவுள்ள சிம்பாப்வே அணியுடனான போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற வேண்டும். எவ்வாறாயினும் இலங்கை அணியின் அரையிறுதி அதிர்ஷ்டம் இன்றைய போட்டியின் மூலம் தெரிவாகும் (த-5)

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### அவுஸ்திரேலியா எதிர் நியூசிலாந்து

**அவுஸ்திரேலியா**

50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| கில்கிறிஸ்ற் | lbw | b பொண்ட் | 18 (20) |
| கையிடன் | c மக்கலம் | b பொண்ட் | 01 (04) |
| பொண்டிங் | c பிளமிங் | b பொண்ட் | 06 (20) |
| மாட்டின் | c மக்கலம் | b பொண்ட் | 31 (53) |
| லெக்மன் | c அஸ்ரல் | b அடம்ஸ் | 04 (09) |
| பெவன் | c வின்சென்ற் | b ஓரம் | 56 (94) |
| ஹொக் | lbw | b பொண்ட் | 00 (01) |
| ஹர்வி | b பொண்ட் | | 02 (11) |
| பைசல் | c கைம்ஸ் | b ஓரம் | 64 (83) |
| பிரெட்லி | not out | | 15 (06) |
| மக்ராத் | not out | | 03 (02) |

உதிரிகள் –08

**பந்து வீச்சு -நியூசிலாந்து**

| | | | |
|---|---|---|---|
| பொண்ட் | 10 | 23 | 6 |
| அடம்ஸ் | 09 | 46 | 1 |
| வெட்டோரி | 10 | 40 | 0 |
| ஓரம் | 07 | 48 | 2 |
| ஹரிஸ் | 10 | 24 | 0 |
| ஸ்டைரிஸ் | 03 | 18 | 0 |
| அஸ்ரில் | 01 | 08 | 0 |

**நியூசிலாந்து**

30.1 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| வெட்டோரி | c கில்கிறிஸ்ற் | b மக்ராத் | 10 (09) |
| பிளமிங் | c கில்கிறிஸ்ற் | b பிரெட்லி | 48 (70) |
| அஸ்ரில் | c பொண்டிங் | b மக்ராத் | 00 (03) |
| ஸ்டைரிஸ் | lbw | b மக்ராத் | 03 (06) |
| கைம்ஸ் | c பிரெட்லி | b பைசல் | 16 (25) |
| வின்சென் | c மாட்டின் | b ஹர்வி | 07 (20) |
| ஹரிஸ் | not out | | 15 (24) |
| மக்கலம் | lbw | b பிரெட்லி | 01 (07) |
| ஓரம் | b பிரெட்லி | | 00 (01) |
| அடம்ஸ் | b பிரெட்லி | | 00 (06) |
| பொண்ட் | c&b பிரெட்லி | | 03 (10) |

உதிரிகள் - 09

**பந்து வீச்சு - அவுஸ்திரேலியா**

| | | | |
|---|---|---|---|
| மக்ராத் | 6 | 29 | 3 |
| பிரெட்லி | 9.1 | 42 | 5 |
| ஹர்வி | 6 | 11 | 1 |
| பைசல் | 5 | 15 | 1 |
| ஹொக் | 4 | 11 | 0 |

## அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி

# இந்திய கிரிக்கெற் ரசிகர்கள் தென்னாபிரிக்காவுக்கு படையெடுப்பு

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் இந்திய அணி அரைஇறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதால் மும்பாயில் இருந்து தென்னாபிரிக்காவுக்கு மேலும் 10 விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளதாக தென்னாபிரிக்க எயார்வேய்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

3ஆயிரம் ரசிகர்கள் போட்டிகளைக் கண்டுகளிக்க் செல்வர் என எதிர்பார்க்கப்பட்ட போதும் தற்போது அவ் எண்ணிக்கை ஆயிரக் கணக்கால் உயர்ந்துள்ளது. இந்திய அணி இறுதியாட்டத்தில் பங்குபற்றும் சமயத்தில் பிரதமர் வாஜ்பாய் தென்னாபிரிக்கா செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் ஒருபோதும் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் விமானங்களை சேவையில் ஈடுபடுத்தவில்லை என தென்னாபிரிக்க எயார் வேய்ஸ் பொதுத் தொடர்பு நிர்வாக மேலாளர் ரிச் மஹோாண்டோ தெரிவித்துள்ளார். (த-55)

## இன்றைய ஆட்டம்

**சிம்பாப்வே எதிர் கென்யா**

(புளுப் பொன்டேன்)

2.00 P.M

## காலியாகும் ஸ்ரேடியங்கள்

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியிலிருந்து தென்னாபிரிக்கா வெளியேறியதால், ஆட்டங்களை கண்டுகளிக்க வரும் ரசிகர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த சனிக்கிழமை புளோயம் பாண்டனில் நடைபெற்ற நியூசிலாந்து, சிம்பாப்வே அணிகளுக்கிடையேயான ஆட்டத்ததைக் கண்டுகளிக்க 2000 ரசிகர்களே திரண்டிருந்ததாக தென்னாபிரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய-இலங்கை அணிகளுக் கிடையிலான முக்கிய ஆட்டத்தில் கூட இலகுவாக நுழைவுச் சீட்டுக்கள் பெறக்கூடியதாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. (த-55)

இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

வலம்புரி

நாடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப் போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்

பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1.இம் முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2.இப் போட்டியின் சகல துறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

வலம்புரி

இல, 15 வெள்ளாந் தெரு

யாழ்ப்பாணம்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ..................

முகவரி : ..................

தே.அ.அ.இல : ..................

கையொப்பம்:..................

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி

மார்ச் 15, 2003

## சாதனைகளை நிலைநாட்டி ஓய்வுபெறும் சயீட் அன்வர்

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சயீட் அன்வர் கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளாார்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற வீரர் என்ற முத்திரையைப் பதித்து விட்டே அவர் வெளியேறுகிறார்.

ஓய்வு குறித்து அன்வர் கூறுகையில், கிரிக்கெட் உலகில் செய்து முடிக்க வேண்டிய அனைத்தையும் செய்து முடித்திருப்பதுடன் ஓய்வுபெற்று சிறந்ததொரு சமய வாழ்க்கையில் இணையப் போகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

1989ம் ஆண்டு கிரிக்கெட் உலகில் நுழைந்த அவர் இதுவரை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 20 சதங்களைக் குவித்துள்ளார். மொத்தமாக 247 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி 8823 ஓட்டங்களைப் பெற்று 6வது இடத்தில் இருக்கும் இவர் 39.21 எனும் ஓட்டச் சராசரியையும் கொண்டுள்ளார். இந்தியாவுக்கு எதிராக இவர் பெற்ற 194 ஓட்டங்களே இதுவரை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாகக் காணப்படுகின்றது. டெஸ்ட் கிரிக்கெற்றில் மொத்தமாகப் பதினொரு சதங்கள் உட்பட 4052 ஓட்டங்களைப் பெற்ற இவர் 45.52 சராசரி ஓட்ட எண்ணிக்கையையும் கொண்டுள்ளார். (த-55)

## இல. அணியின் தோல்வி பயிற்றுநர் கடுமையாகச் சாடல்

இந்திய, இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்த விதத்தை இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் டேட்வட் மோர் கடுமையாகச் சாடியுள்ளார்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி போராடும் குணத்தை விட்டு சாதாரணமாக விளையாடியதாலேயே இத் தோல்வி ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அணி கென்ய அணியுடன் தோல்வியடைந்ததையும் அவர் சுட்டிக் காட்டி கடுமையாக விமர்சித்துள் ளார். (த-5)

2003 CRICKET WORLD CUP

## சிறு விளம்பரம்

**உங்கள் பலாபலன்கள்**

2003/2004-சுபானு வருஷப் பலாபலன்கள் உங்களுக்கு எப்படி? எங்கும் விற்பனையாகின்றன. வியாழ, சனீஸ்வர, இராகு-கேது கிரக மாற்றங்களினால் உங்கள் எதிர்காலம் பற்றி அறிந்து கொள்ளலாம். மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றியைத் தட்டிச் செல்ல வழிகாட்டல் பயிற்சிகள். உங்கள் அபிமான எழுத்தாளர் திரு. V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்க மறக்காதீர்கள். (6808)

**விற்பனைக்கு**

**10ஸ்ரீ 5735**

**வோக்ஸ்வகன் 1300**

**பச்சை நிறமுடைய கார் விற்பனைக்கு. சனி, ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம். நியாயமான விலைக்கு விற்கப்படும். சுவாமி சித்ரூபானந்தா, ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.**

**தொலைபேசி:070-212910**

(C/5832)


# யாழ். குடாநாட்டு மக்கள்

# நிரந்தர சமாதானத்தின் மேலுள்ள நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது

## அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் பொது அமைப்புகள் சந்திப்பில் உரை

(தென்மராட்சி)

**இப்போது நடைமுறையில் இருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பலாபலன்கள் அடுத்த வருடம் மிகவும் மேன்மை கொண்டதாக இருக்கும் என அமெரிக்கா நம்புகின்றது. எனவே குடாநாட்டு மக்கள் தமது பொறுமையை இழக்காது நம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் வளர்ப்பதுடன், நிரந்தர சமாதானமும், பொருளாதார சுபீட்சமும் நிலைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ வேண்டும்.**

என நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு ஒரு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வருகைதந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் கூறினார்.

யாழ். டீச் ஹோட்டலில் இவர் நேற்று மதியம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து குடாநாட்டு மக்களின் இப்போதைய நிலைப்பாடுகள், பிரச்சினைகள் மற்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்பான நிலைமைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

அவ்வேளை தூதுவர் அஸ்லி வில்ஸ் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாணத்து நிலமைகள் பற்றியும் மக்களுடைய தேவைகள் பற்றியும் அறிவதில் அமெரிக்கா மிகவும் அக்கறை கொண்டுள்ளது. யாழ்ப்பாண மக்களும் அமெரிக்க மக்களும் மிக நீண்ட காலமாக நண்பர்களாக இருந்து வந்துள்ளனர்.

இங்குள்ள மக்கள் சமாதானத்தை நன்கு அனுபவித்து தமது பொருளாதார கட்டமைப்புகளை மேலும் மேன்மைப் படுத்தி நல்ல வாழ்க்கையினை அமைக்க வேண்டும் என்பது எமது பெரு விருப்பமாகும். அத்துடன் பொறுமையின் முக்கியத்துவத்தையும் இப்பகுதி மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டினை வளர்ச்சி அடையச் செய்ய உதவும் பொருட்டு யு.எஸ் எயிட் (USAID) நிறுவனத்தின் பணிமனை ஒன்று இன்னமும் இருவார காலத்தில் வவுனியாவில் அமைக்கப்படவுள்ளது. அதன் மூலம் குடாநாட்டு மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கான சிறு உதவித் திட்டங்களை இங்கும் ஆரம்பிப்போம்.

மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டு ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சர்வதேசத்திலும் நிகழ்பவையாகும் இருப்பினும் யாழ். குடாநாட்டு ஊடகவியலாளர்களின் பணிகளை மேம்பாடடையச் செய்வதற்கு எமது தூதுவராலயம் நிச்சயம் ஆவன செய்யும் எனக் கருதுகின்றேன்.

அத்துடன், இருபது வருட கால யுத்தத்தின் அழிவில் இருந்து மீண்டுள்ள குடாநாட்டு மக்கள் தமது நம்பிக்கையையும், உறுதிபாட்டையும் இழக்காது எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து வாழவேண்டும்.

குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளை போன்றுதான் தமக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக தென்பகுதி மக்களும் தெரிவிக்கின்றனர் என தூதுவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின்போது யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தைச் சேர்ந்த பொ.விக்னேஸ்வரன், மகளிர் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த திருமதி சரோஜா சிவச்சந்திரன், நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக் குழுவின் தலைவர் வணபிதா ஏ.ஜ.பேர்ணாட், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகரா, வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கச் செயலாளர எம்.கே.ஜீவகதாஸ் மற்றும் யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் வே.தவச்செல்வம் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

கொழும்பிலிருந்து விமான மூலம் வந்திருந்த தூதுவர் யாழ்ப்பாணத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்ததுடன் யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கத்துடன் சென்று புனரமைக்கப்பட்ட யாழ். நூலகத்தைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77,4,7,43)

## அமைப்பு நடவடிக்கைகள் பார்வையிடல்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலக தற்காலிக கட்டடத்தை வடக்கு-கிழக்கு பிரதம செயலாளர் றங்கராஜ், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். செயலகத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் ஆகியோர் அடங்கிய குழு கடந்த ஞாயிறன்று பார்வையிட்டுள்ளது.

இம்மாத இறுதிப்பகுதியில் புதிதாகத் திறக்கப்படவுள்ள காரைநகர் பிரதேச செயலக நிர்வாக நடவடிக்கைகள் இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக அமைப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டுள்ளதுடன் துரிதமாக திறப்பது தொடர்பாகவும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர். (உ-246)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(புத்தூர்)

புத்தூர் கிழக்கு சரஸ்வதி ச.ச.நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது தலைவராக சி.இராஜ்மோகன், உப தலைவராக ப.பிரதீபன், செயலாளராக வை.வசீகரன், உபசெயலாளராக வெ.இராசரூபன், பொருளாளராக க.ஸ்ரீதரன், எண்பரிசோதகராக கி.நவரத்தினம், போஷகராக சி.ஸ்ரீதரன் ஆகியோரும் ஏழுபேர் கொண்டநிர்வாகக் குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-69)

## புனரமைக்கப்பட்ட முன்பள்ளி திறந்துவைப்பு

(புத்தூர்)

புனரமைக்கப்பட்ட புத்தூர் கிழக்கு ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலைய முன்பள்ளி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சேதமடைந்திருந்த இம்முன்பள்ளியைப் புனரமைக்க இவ்வூரவர்களான கனடாவில் வசிக்கும் இ.சிவதாஸ், நா.செந்தூர்க்குமரன் ஆகியோர் நிதி உதவியளித்தமை குறிப்பித்தக்கது. (உ-69)

## 6 ஆம் சுற்றில் அடித்தளம்

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள 6 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஜப்பானில் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான அடித்தளத்தை இடும் என ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை டோக்கியோ நகரின் தென்மேற்கே அமைந்துள்ள கனஹாவா நகரின் ஹகோனே ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்றார். (உ-10)

## சீருடைத்துணிகள் வந்தன

(அராலி)

சங்கானை வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிற்கான சீருடைத் துணிகள் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. (உ-214)

## வெற்றிவிழா

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு குடாரப்பு தரையிறக்க வெற்றிவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை குடாரப்பு கடற்பகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை கலந்து சிறப்பிக்கவுள்ளார். (உ-43)

### பத்திரிகையாளர் திருச்செல்வம் கைது விவகாரம்

# குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு எதிராக விரைவில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் திருச்செல்வம் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அவரை மிருகத் தனமாகத் தாக்கி துன்புறுத்தி சித்திரவதை புரிந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.சி.ஹப்பு ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸார் பொலிஸ்மா அதிபரின் இவ் உத்தரவு பற்றிப் பத்திரிகையாளர் திருச்செல்வத்திற்கு அறிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான பருத்தித்துறையில் இருந்து உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக குடும்பத்துடன் கொழும்புக்குச் சென்றிருந்தவேளை பத்திரிகையாளர் திருச்செல்வம் பொய்யான தகவல்களினால் பொலிஸாரினால் வெள்ளவத்தையில் வைத்து நள்ளிரவு வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இவர் 12 நாட்கள் தனியறையில் விலங்கிட்டு வைக்கப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால். மிருகத் தனமாகத் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குப் புகார் செய்யப்பட்டிருந்தது.

இச்சித்திரவதை சம்பந்தமாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனித உரிமை ஆணைக்குழு



அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். இப்பொலிஸாருக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இவரது கைது குறித்து ஜனாதிபதி மற்றும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரிடமும் முறையிடப்பட்டது.

பத்திரிகையாளர் திருச்செல்வத்தின் மீது வழக்குத் தொடர்வதற்கு எதுவித ஆதாரங்களும் இல்லாமையால் அவரை விடுதலை செய்யுமாறு குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டிருந்தார். திருச்செல்வம் கொழும்பு கோட்டை நீதிபதி திரு. எஸ்.பிரியந்த பெர்ணான்டோ முன்னிலையில் 30.03.2001 இல் ஆஜர் செய்யப்பட்டு குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டார்.

பத்திரிகையாளர் திருச்செல்வம் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைப்படுத்திய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டதை அடுத்தே பொலிஸ்மா அதிபர பத்திரிகையாளர் திருச்செல்வம் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவில் துன்புறுத்தல் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விசேட புலனாய்வுத் துறைப் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (க)


## தரம் 08 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 500
2ஆம் பரிசு ரூபா 250
3ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*நாயன்மார்கட்டு **அமரர் இராமலிங்கம் இராசையா** அவர்கள் ஞாபகார்த்தமாகப் பரிசில்கள் வழங்கப்படும்.

### போட்டியின் விதிகள்

**தரம் எட்டில்** இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* **கட்டுரையின் தலைப்பு :** ''எனக்குச் சிறகு முளைத்தால்''
* கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.03.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-3**


மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
கற்கும் தரம் :------------------------------

**உறுதிப்படுத்துகிறேன்**

------------------
ஆசிரியர்

# ஈராக் மீதான போரில் ஐ.நாவை புறக்கணிப்பது சாசனத்தை மீறும் செயலாக அமையும்

## அமெரிக்கா, பிரிட்டனுக்கு கோபிஅனான் சாட்டை



(நியூயோர்க்)

***ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் ஒத்துழைப்பு இன்றி ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமேயானால் அது பேரவையின் சட்ட விதிகளுக்குப் புறம்பான செயலாக அமைவதுடன் சாசனத்தை மீறும் செயலாகவும் அமையும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் எச்சரித்துள்ளார்.***

ஈராக் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய நகல் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் உறுப்புநாடுகள் ஐக்கியப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

.நெதர்லாந்துக்கு விஜயம் செய்துள்ள கோபி அனான் பாதுகாப்புப் பேரவையைப் புறந்தள்ளிவிட்டு அமெரிகாவும், மற்றைய நாடுகளும் போரில் ஈடுபட்டால் அது பேரவையின் அதிகாரத்தைக் கேள்விக் குறியாக்கிவிடுமென்று குறிப்பிட்டார்.

அதேவேளை புதிய தீர்மானத்திற்கு அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், பல்கேரியா ஆகிய நாடுகள் மட்டும் ஆதரவு தெரிவித்துவரும் நிலையில் பிரான்ஸ் ரஷ்யா, சீனா. ஜேர்மனி, சிரியா என்பன கடும் எதிர்ப்புதெரிவித்து வருகின்றன.

அங்கோலா, கமரூன், சிலி, மெக்ஸிகோ, என்பன புதிய தீர்மானம் குறித்து எதுவித முடிவும் எடுக்க முடியாது உள்ளநிலையில் புதிய தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லையென்று பாகிஸ்தான தீர்மானித்துள்ளதாக அந்நாட்டின் ஆளும் கட்சியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

***வாக்கெடுப்பு தாமதமாகும்?***

அமெரிக்கத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு மேலும் தாமதமாகலாம் என்று சில ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தீர்மானத்துக்கு ஆதரவாக 9அல்லது 10வாக்குகளைப் பெறும் முயற்சி பலனளிக்கும் வரை வாக்கெடுப்புத் தாமதமாகலாம் என்றும் சில நாடுகளைத் திருபதி செய்வதற்காக அமெரிக்கா கடைசிநிமிடத்தில் தீர்மானத்தில் சில திருத்தங்களைச் செய்யலாமென்று கருதப்படுகின்றது.

ஐ.நா சம்மதத்துடன் போர் தொடங்கப்படுமானால், ஈராக்கை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஐ.நா.சபையின் உறுப்புநாடுகளைச் சார்வதாய் இருக்கும்.

கடைசிநேர இரகசிய சந்திப்புகளின் பிரகாரம்அமெரிக்காவும் பிரிட்டனும் காலக்கெடுபற்றியும் வேறு திருத்தங்கள் செய்வதுபற்றியும் அலோசிக்க ஒத்துக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. (பி-2)



இரசாயன ஆயுதத்தாக்குதல் நடத்தப்பட்டால் எவ்வாறு மக்களைக் காப்பாற்றுவது என்பதை இஸ்ரேலிய இராணுவத்தினர் மெங்குரியன் விமான நிலையத்தில் பயிற்சி செய்து பார்க்கின்றனர்.

# ஈராக்மீதானபோரைசர்வதேச சமூகம்தடுத்துநிறுத்த வேண்டும்

## யாஸீர் அரபாத்

(ரெல்அவில்)

ஈராக்மீது யுத்தம் ஏற்படாத வண்ணம் சர்வதேச சமூகம் முன்னின்று தடுத்து நிறுத்த வேண்டும் என்று பலஸ்தீனத் தலைவர் யாஸீர் ஆரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் ஈராக்கில் ஆயுதசோதனையில் ஈடுபடுபவர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாலஸ்தீனப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதலை நடத்தக் கூடாது என்று சர்வதேச சமூகம் கோரிக்கை விடுக்க வேண்டும் என்றும் பாலஸ்தீன தலைவர் வலியுறுத்தியுள்ளார். (பி-2)




பலஸ்தீன சட்டசபை மேற்குக்கரை நகரமான ரமெலாவில் நடைபெற்ற பலஸ்தீன சட்டசபையின்ஆரம்பத்தில் பலஸ்தீன அதிபர் யாஸீர் அரபாத், பாராளுமன்ற சபாநாயகர் அகமத்கெரே இருவரும் தொழுகையில ஈடுபட்டிருக்கும காட்சி.

# மலேஷியாவில் 270 இந்திய பொறியியலாளர்கள் கைது

(கோலாலம்பூர்)

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் ஞாயிற்றுக்கிழமை 270 இந்தியர்களை மலேசிய பொலிஸார் கைது செய்தனர். அவர்களது பாஸ் போர்ட்டுகளை அழித்து அடித்து உதைத்தனர். இந்தியத் தூதரகம் தலையிட்டதால் அவர்களில் 5பேரைத்தவிர மற்ற அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்

கோலாலம்பூரில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களை கண்டுபிடிப்பதற்கான சோதனையை பொலிஸா ஞயிற்றுக்கிழமை காலை துவங்கி மாலை வரை நடத்தினர். இந்தியர்கள அதிகம் வாழும் பகுதியில் இச் சோதனை நடைபெற்றது.

பல மாடிகள் கொண்ட கட்டடத்தில் பொலிஸார் சோதனை நடத்தி 270இந்தியர்களை கைது செய்தனர். இவர்களில் பெரும்பான்மையினர் கணனிப் பொறியியலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக கணனிப் பொறியியலாளர் திலிப் என்பவர் இந்தியத் தூதரகத்தில் மனு ஒன்றைக் கொடுத்தார்.

எங்கள் குடியிருப்புப் பகுதியில் பொலீஸார் சோதனை மேற்கொண்டனர். 270பேரை கைது செய்தனர். இதில் 178 பேரிடம் கையெப்பம் பெற்றனர். பொலீஸார் எங்களை அடித்து உதைத்தனர். பாஸ் போர்ட்டுகளை அழித்தனர் என்று அந்த மனுவில் திலிப் குறிப்பிட்டிருந்தார். (பி)

# பாக்.நகரங்களில்போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ராவல்பிண்டி நகரில் வரலாறுகாணாத அளவில் போர் எதிர்ப்புப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

ஈராக் மீதான அமெரிக்க மற்றும், பிர்த்தானிய அரசாங்கத்தின் போர் எதிர்ப்புக்கான இந்த ஆர்ப்பாட்டப் பேராணி பர்வேஷ் முஷாரப்பிற்கு சமீபத்தில் அளிக்கப்பட்ட வரையறையற்ற அதிகாரங்களை எதிர்த்தும கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஈராக்கிய மக்களின் இரத்தம் குடிப்பவராக சுவரொட்டிகளை ஏந்தியவாறு சென்றுள்ளனர்.

அனைத்து அரேபிய மக்களும் ஒன்றுபடுவதும் உலக இஸ்லாமியர்கள் இந்தப் போருக்கு எதிராக திரள்வதும் அவர்களது கடமை எனவும் இந்தப் பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளன. (பி-2)

# ஒஸாமா பதுங்கியிருக்கும் இடம் சுற்றி வளைப்பு?

(ராவல்பிண்டி)

அண்மையில் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட அல்கெய்டா தீவிர வாதத்தலைவர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஒஸாமா பின்லேடன் பதுங்கி இருக்கும் பகுதியை பாகிஸ்தான் அதிகாரிகள் நெருங்கி விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

மார்ச் 1ம் திகதி காலித் ஷேக் முஹமத் என்ற நபர் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். ஒஸாமா பின்லேடன் பயங்கரவாத வலை அமைப்பின் மூன்றாம் நிலையிலுள்ள ஒருவர் இவர் என்று நம்பப்படுகிறது.

இவரும் இவரைப்போன்ற வேறு சிலரும் வழங்கியுள்ள தகவலகள் பயங்கரவாதத் தலைவர் ஒஸாமா பின்லேடன் பதுங்கியிருக்கும் இடத்தை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அதிகாரிகள் அவ்விடத்தை நெருங்கி விட்டதாகவும் இரகசிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி)

### ஈராக்கிலிருந்து இந்தியர் வெளியேற்றம்

(புதுடில்லி)

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் சூழ்நிலை உருவாகி வருவதை அடுத்து அங்குள்ள இந்தியரும் வெளியேற வேண்டும் என இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

தூதரகத்தில் அதிகாரிகள் உட்பட 50பேர் உள்ளனர் அங்கிருந்து உடனடியாக வெளியேறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (பி)



1928ஆம 'ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி சென்.பிரான்சின் அணைக்கட்டு நிரப்பப்பட்ட முதல் தடவையே உடைப்பெடுத்து ஓடி 1200வீடுகளை அழித்ததுடன் 450பேர் மரணமாவதற்குடம் காரணமாயிற்று. அணைக்கட்டு உடைப்பெடுத்துக் கடலைச் சென்றடைய 5மணி 25நிமிடம் எடுத்ததாம். அமெரிக்க சிவில் பொறியியல் துறையில 20ஆம் நூற்றாண்ல் தோல்விகண்ட ஒரேஒரு திட்டம் இதுவாகும் வெள்ளம் கடலைநோக்கி ஓடிய பாதையையம் இடங்களையும் கலிபோர்னிய அரும்டபெருட்காட்சி சாலையில் அலுவலர் ஒருவர் படம் மூலம் காட்டி விளக்குவதைப் படத்தில் காணலாம்.

## ஒஸாமாவுடன் தொடர்புடைய

# அல்கெய்டா ஆட்கள் மேலும் 11 பேர் கைது

(இஸ்லாமபாத்)

அல்கெய்டா - இயக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 11 பேரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு நகரமான பிரிஷாவாரில் கைது செய்யப்பட்ட இந்த நபர்களில் ஒருவர் ஒஸாமா பின்லேடனுடன் தொடர்பு வைத்திருந்ததை நம்பக்கூடியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக புலனாய்வு பிரிவினர் கூறியுள்ளனர்.

ஆப்கான், அல்லது எகிப்து நாட்டை சேர்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகின்ற மஜீட்என்ற பெயரைக் கொண்ட இந்த நபருக்கு ஒஸாமா பின்லேடனிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளதை புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**வினா இல : 07** ஆக்கம் : சுந்தர் வெளியீடு

வலம்புரி 05.03.2002

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

இவ்வாண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்று சித்தியடைந்த சின்னத்தம்பி கோகுலவாசனையும் (182) அவரோடு சித்தியடைந்து வளபூமி மத்திய கல்லூரிக்கும் எமது கிராமத்திற்கும் பெருமை தேடித்தந்த எமது செல்வங்களான

| | | |
|---|---|---|
| மாசிலாமணி | பிரியந்தி | 160 |
| தேவராசா | ஆதவன் | 154 |
| ஆதவன் | பிரிந்தன் | 150 |
| பாலசுப்பிரமணியம் | பிரணவன் | 138 |
| குற்றாலீஸ்வரன் | சாம்பவி | 118 |

ஆகியோருடன் வெட்டுப்புள்ளிக்கு அண்மைப் புள்ளி பெற்ற ஏனைய செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் இந்த நிலமையை அடைய ஏணியாய் அமைந்த அதிபர், ஆசிரியர்கள், சாயி கல்வி நிறுவன ஆசிரியர்கள் மேலும் தபால் மூலம் வினாத்தாளை அனுப்பி உதவிய சுந்தர் வெளியீட்டு நிறுவனத்தினருக்கும் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை
வளபூமி சைவ மறுமலர்ச்சிக் கழகம்

01. இப்பகுதி எங்கிருந்து பெறப்பட்டிருக்கலாம்?
1. பத்திரிகை 2. அழைப்பிதழ் 3. புத்தகம்

02. புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாவதாக வந்த மாணவர் பெயர்
1. தே. ஆதவன் 2. சி. கோகுலவாசன் 3. ஆ. பிரியந்தன்


03. புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவது
1. தரம் 4 இல் 2. தரம் 5 இல் 3. தரம் 6 இல் ஆகும்


04. இம் மாணவர்கள் எந்தப்பாடசாலையைச் சேந்தவர்கள்
1. சாயி கல்வி நிறுவனம் 2. வளபூமி மத்திய கல்லூரி
3. கூறமுடியாது


05. "தபால்" என்னும் சொல்லின் சரியான ஆங்கிலச் சொல்
**1. Post 2. Poset 3. Poost**

06. இம் மாணவர்கள் தமது பரீட்சையை வெற்றிகரமாகச் செய்ய உதவி புரிந்த மூவர் பெயர்களை எழுதுக.
1. ..............................
2. ..............................
3. ..............................

✳ **கீழேதரப்பட்டுள்ள எண்களுக்கிடையிலான கோலத்தை நன்கு அவதானித்து வெற்றுக் கூட்டினுள் பொருத்தமான எண்ணை எழுதுக.**

07.



08.




09.



✳ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


10. தரம் 5 கணிதப் புத்தகத்தின் நீளம் அண்ணளவாக
**1. 100cm 2. 25cm 3. 50cm 4. 75cm**

11. இருபதாயிரத்து ஐம்பத்தேழு என்பதை இலக்கத்தில் எழுதினால்
1. 2057 2. 20057 3. 200057 4. 2000057

12. உரோமன் இலக்கத்தில் குறிக்கப்படும் XI, IV, VI, IX என்பவற்றை ஏறுவரிசைப் படுத்தினால் பெறப்படுவது.
1. VI,IX,XI,IV 2. XI,IX,VI,IV
3. IV,VI,IX,XI 4. IV,VI,XI,Ix

13. கீழேயுள்ள ஒவ்வொரு கூட்டிலும் சம அளவான பந்துகள் உள்ளன. அவற்றில் $^1/_3$ பகுதி நிழற்படுத்தப்பட்டுள்ள கூடு.

(1) (2) (3) (4)

14. ஆங்கிலத்தில் ஐ என்பது "நான்" எனவும் YOU என்பது "நீ" எனவும் கூறப்படின் இப்பொழுது நீ என்னைப் பார்த்து எவ்வாறு அழைப்பாய்?
1. YOU 2. I 3. I அல்லது YOU 4. புதிய சொல்

15. வேறுபாடான உருவம்

(1) (2) (3) (4)

16. வேறுபட்டு நிற்கும் எழுத்து வடிவம்
அ எ உ ந
(1) (2) (3) (4)

17. வேறுபட்டு நிற்கும் சொல் வடிவம்
1. தாமரை 2. காகம் 3. ஈ 4. கல்வி


18. சதுரம் ஒன்றுடன் தொடர்புடைய சரியான தொடர்பு
1. பக்கம் =4 2. உச்சி =5 3. விளிம்பு =12 4. முகம் =4

19. ஒரு கிலோகிராம் இரும்பையும் ஒரு கிலோகிராம் பஞ்சையும் தட்டுத் தராசின் இருபக்கங்களிலும் வைத்தால் நிகழ்வது?
1. இரும்புப் பகுதி தாழும் 2. சமனாக இருக்கும்
3. கூறமுடியாது 4. பஞ்சுப்பகுதி உயரும்

20. பெரியவர்களும் சிலவேளை பிழைவிடுவதுண்டு என்பதை விளக்கும் பழமொழி
1. இளங்கன்று பயமறியாது 2. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது
3. ஆனைக்கும் அடிசறுக்கும் 4. ஆறின கஞ்சி பழங்கஞ்சி

✳ **A பகுதிக்கு பொருத்தமான தொடர்பு சாதனத்தை B யில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை நடுவேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

| | பகுதி A | | பகுதி B |
|---|---|---|---|
| 21. | அன்புள்ள ஆசிரியருக்கு;<br>நான் நலம் உங்கள் நலத்தையும் கடவுள் காப்பாற்றுவாராக.... | | (1) தந்தி |
| 22. | நல்வாழ்த்துக்கள் | | (2) தொலைபேசி |
| 23. | ஹலோ, ராஜா இருக்கிறாரா | | (3) கடிதம் |
| 24. | அம்மாவிற்கு வருத்தம் கடுமை உடன் வரவும் | | (4) வாழ்த்துமடல் |

25. கீழே உள்ள உருக்களில் வட்ட வடிவம் இருப்பின் புள்ளிக் கோட்டில் வெள்ளை என எழுதுக. வட்ட வடிவம் இல்லை எனின் கறுப்பு என எழுதுக.

(..............)

26. கீழே உள்ள பெயர் ஆணுக்குரியது எனின் ஆம் எனவும் பெண்ணுக்குரியது எனின் இல்லை எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக.
**செல்வி சிவகாமசுந்தரி சிவஞானசுந்தரம்.** (..................)

27. கீழே உள்ளவர் வயது குறைந்தவர் எனின் இளமை எனவும் வயது முதிர்ந்தவர் எனின் முதுமை எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக.
**செல்வி அருண்யா ஸ்ரீஸ்கந்தராஜா - தரம் 5** (..................)

28. "தைத்திருநாள் இல்லமெல்லாம் தளிர்த்திடும்" இப்பாடல் தைப்பொங்கல் பற்றியது என்றால் "வெடி" எனவும் இல்லையெனில் "பிடி" எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக. (..................)

✳ **பின்வரும் சந்தர்ப்பங்களில் நீர் யாது செய்வீர் என எழுதுக.**

29. "போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கும் கண் தெரியாத ஒருவரைக் காணும் போது"
..............................

30. "இரவு வேளையில் அயல் வீட்டில் ஐயோ! என்னும் அவலக்குரல் கேட்டால்..."
..............................


31. "நீர் சைக்கிளில் பாடசாலை செல்கையில் நடந்து வரும் உமது தோழனைக் காணும் போது..."
..............................


32. "கோயிலில் யாரோ தவறவிட்ட தங்க நகையைக் கண்டெடுக்கும் போது..."
..............................

✳ **கூட்டுக்குள் தரப்பட்ட சொற்களுள் பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

**இராக்காலம், அகராதி, பரிசு, ஓடுவேன், குவியல்**

33. அன்பின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்கப்படுவது ..................
34. பூக்களின் தொகுதி கொத்து அதுபோல் கற்களின் தொகுதி ..................
35. இரவு +காலம் என்பதைச் சேர்த்து எழுதினால் ..................
36. ஓடினேன் என்பதன் எதிர்காலம் ..................
37. அகரவரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் ..................

38.

1. இரு உருக்களிலும் நிழற்படுத்தப்பட்டுள்ள அளவு சமனாகும்.
2. இரு உருக்களிலும் $^1/_2$ பகுதி நிழற்படுத்தப் பட்டுள்ளது.
3. இரு உருக்களிலும் நிழற்படுத்தாத பகுதியின் அளவு சமனாகும்.

39.


அருகேயுள்ளது 20 cm நீளமான கம்பியாகும். இக்கம்பியை வளைப்பதன் மூலம் அருகேயுள்ள
1. சதுரத்தை அமைக்கமுடியும்
2. சதுரத்தை அமைக்க முடியாது
3. சதுரத்தை அமைக்க நீளம் போதாது.

40.

அருகேயுள்ள படங்களில் ஒப்பீட்டு ரீதியில் தவறாக உள்ளது எது?
1. தென்னைமரம்
2. மனிதன்
3. நாய்

**குறிப்பு:** மாணவர்களின் நலன்கருதி இவ்வினாத்தாளை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை மட்டும் வேறொரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும் வினா இலக்கங் களைச் சரியாகக் குறிப்பிடவும்.

## 5ம்தர புலமைப்பரீட்சை வினாத்தாள் -7

மாணவர் முழுப்பெயர்..............................
பாடசாலையின் பெயர் :..............................
வீட்டின் முகவரி:..............................
மாணவர்களே உங்கள் விடைகளை 19.03.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி

**வலம்புரி
கல்விப் பகுதி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்**

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினா இல : 05

*அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்*

1. ஞா. பிரகலாதன் யாழ். இந்து ஆரம்பபாடசாலை
2. கு. விஜிதா வல்வை றோ.க.த.க.பாடசாலை
3. வி. பிரியா பொலிகண்டி இ.த.க. பாடசாலை
4. கே. சோபனா அருணோதயக் கல்லூரி
5. து. வைஷ்ணவி ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
6. எஸ். சுவஸ்திகா கந்தரோடை த.மி.க. பாடசாலை
7. ம.நிரூபன் வல்வை சிவகுரு வித்தியாசாலை
8. ச. ஜெயபாரதி வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
9. பி. ஜோபிதா வல்வை சிவகுருவித்தியாசாலை
10. க. திலக்ஷன் கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
11. பி. ஜோதிகா வல்வை சிவருகுரு வித்தியாசாலை
12. பி. நந்தினி வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
13. ஸ்ரீ. நீரஜா வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
14. இ. மதனிகா வல்வை விநாயகர் வித்தியாலயம்
15. கி. லக்சனா துன்னாலை ஞானசாரியார் கல்லூரி
16. த. தனுசியா வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
17. ம. கீர்த்திகன் இணுவில் மத்திய கல்லூரி
18. க. கிருஷ்யாயினி இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
19. த. தாசிகன் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
20. த. கபிலன் பரியோவான் கல்லூரி
21. த. விஜிதன் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
22. சி. நிறோஜா கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
23. ம.இந்துஜா மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
24. உ. நவநீதன் நீர்வேலி இ.த.க.பாடசாலை
25. சு. லாவண்யா வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
26. சு. கிருஷாந் மாணிக்கவாசகர் வித்தியாலயம்
27. க. லோகராஜ் நுணாவில் அ.த.க. பாடசாலை
28. சீ. சுஜீபனா அச்சுவேலி மத்திய கல்லூரி
29. இ. வித்தியாகரன் இராமுப்பிள்ளை வித்தியாலம்
30. ச. மதுறமி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
31. ச. சஜ"தீப் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
32. ப. சுகீர்த்தனா தேவரையாளி இந்துக்கல்லூரி
33. கோ. ஸ்ரீநாத் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
34. த. அகர்ச்சனன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
35. யோ. லவிஜெனா அச்சுவேலி மத்தியகல்லூரி
36. சி. தேவகி துன்னாலை மே.மி.த.க.பாடசாலை
37. பா. டினேஸ் துன்னாலை மே. மி.த.க. பாடசாலை
38. இ. கிரிசாந் யாழ். மத்திய கல்லூரி
39. யோ. துஷகன் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
40. சி. தயனி ஆவரங்கால் ந.இ. வித்தியாலயம்
41. தி. கஜிவன் காரைநகர் கலாநிதி தியாகராஜா ம.மகா வித்தி.
42. கு. கஜன் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்
43. சி. டினோஜன் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
44. ச. தனேஷன் திருநெல்வேலி இ.த.க.பாடசாலை
45. தி. சுஜிக்கா சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாலயம்
46. பா. ஆரண்யா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
47. கு. ஜெய்சினி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
48. ச. மேனுஷா ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
49. சி. துளசிகா சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
50. ஆ. நிரோஜினி நவாலி செ. பீறோ.க.த.க.பாடசாலை
51. கீ. அச்சுதன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
52. ந. டிலக்ஷன் கந்தரோடை த.க.வித்தியாசாலை
53. சி. சஞ்சிகா ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி.
54. ர. யதுர்சன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
55. த. பிரியந்தி கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
56. ரா. துர்க்கா நீர்வேலி கரந்தன் இ. வித்தியாலயம்
57. இ. அனுசிகா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
58. ப. பிரமிளா யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்
59. இ. சகானா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
60. கு. கௌதமன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
61. சு. ஹிருசுபா வட்டு இந்து மகளிர் கல்லூரி
62. சி. ஜெயரூபன் தாவடி இ.த.க., பாடசாலை
63. ச. யதுமித்திரன் புற்றளை மகா வித்தியாலயம்
64. பா. பாலினி கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
65. யோ. சுபாஜினி வண்ணார்பண்ணை
66. சி. விஸ்ணுகரன் யாழ். இராமநாதன் கல்லூரி
67. பா. சோபிகா சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம்
68. சி. சரனியா ஆவரங்கால்
69. சி. மனோஜிதன் கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
70. சி. சிவசாந் தம்பசிட்டு மே.மி.த.க பாடசாலை
71. ஸ்ரீ. அதிதரன் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
72. இ. வினுசா மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
73. பே. கலையரசன் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
74. யோ. டினோஜன் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
75. சி. காவமிர்தா சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி
76. யோ. விதுஷன் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
77. க. சியாந்தன் தாவடி இ.த.க. பாடசாலை
78. செ. சஜேந்திரன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி
79. செ. கலிஸ்ரா நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை
80. வே. பிரசன்ஜா உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
81. க. கரிசினி ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
82. கு. மோறஞ்சிதா உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
83. ப. சிவருக்ஷி யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
84. கு.சர்மிளா உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
85. தி. சயேந்தி ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
86. க. கணபாலன் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
87. ஆ. சேந்தன் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

## வினா - 5இன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) (3) | 2) (4) | 20) 1500 | 21) (2) |
| 3) (2) | 4) (3) | 22) (3) | 23) (2) |
| 5) (2) | 6) (3) | 24) (1) | 25) (2) |
| 7) (4) | | 26) (4) | 27) (2) |
| 8) 10 ஆண்டுகள் | | 28) கறுப்பு | |
| 9) 18 ஆண்டுகள் | | 29) வெள்ளை | |
| 10) 6 ஆண்டுகள் | | 30) நீலம் | |
| 11) முக்கோணம் | | 31) (2) | 32) (2) |
| 12) கண்ணா | | 33) (2) | 34) (1) |
| 13) சுமங்கலி | | 35) (1) | 36) (3) |
| 14) சாம்பவி | | 37) (1) | 38) (2) |
| 15) பவித்திரா | | 39) மஞ்சள் | |
| 16) 5 | 17) 10 | 40) ரூபா 192 | |
| 18) 80 | 19) 15 | | |

## பெயர்கள் மீளாய்வு

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மீளக்குடிய மர்ந்த குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கும் பொருட்டு அவர்களின் பெயர் விபரங்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கை யினை யாழ். செயலகத்தினர் கடந்த 9 ஆம் திகதி முதல் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த மக்கள் மீளாய்வு செய்வதன் பொருட்டு தத்தமது கிராம உத்தியாகத்தர்களுடன தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் கேட்டுள் ளனர். (உ-36)

## தங்கச் சங்கிலி அபேஸ்

(கரணவாய்)

நள்ளிரவில் வீட்டினுள் புகுந்த திருடன் உறக்கத்தில் இருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளான்.

கடந்த வெள்ளியன்று துன்னாலை மேற்கு அணிஞ்சிலடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் க. தங்கராணி என்பவருடையை தங்கச் சங்கிலியே அபகரிக்கப்பட்டது.

இதேவேளை, திருடர்களின் அரவம் கேட்டு மேற்படி பெண்மணி விழித்தெழுந்தபோது திருடன் வாளால வெட்ட முற்பட்டதாகவும் கூறப்படுகிறது. (உ-29)

## இலவச சீருடை முத்திரை வழங்கல் இன்றுடன் நிறைவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் (வலிகிழக்கு) பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பாடசாலைப பிள்ளைகள் இலவச சீருடைக்காக முத்திரைகள் அப்பகுதிகிராம அலுவலர்களால் வழங்கப்படு கின்றன.

முத்திரைகள் வழங்கும் கடைசித் திகதி நேற்று ஆகையால் முத்திரை களை இது வரை பெற்றுக்கொள்ளாத பெற்றோர் அல்லது பாதுகாவலர் கள் தங்கள் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தி இன்று தங்கள் பகுதிக் கிராம அலுவலர்களிடம் சென்று அதனைப் பெற்றுக் கொள்ளு மாறு கோப்பாய் பிரதேச செயலர் .கேட்டுள்ளார். (உ)

## சமுர்த்தி விளக்கக் கூட்டங்கள்

(காரைநகர்)

சமுர்த்தி வங்கி தொடர்பான செயற்பாடுகள், மேற்கொள்ளப்பட வுள்ள நிதி நடவடிக்கைகள் பற்றி சமுர்த்தி வங்கி பயிற்சியாளர் களால் காரைநகரில் விளக்கவுரைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தீவகம் வடக்கு பிரதேச செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகத்தின் ஏற்பாட்டில் சமுர்த்தி வங்கியாளர் பயிற்சி நெறிகளை பூர்த்திசெய்தவர் கள் மூலம் வறிய மக்களிற்கு சமுர்த்தி சம்பந்தமான விளக்கத்தினையும் சேமிப்பு பற்றிய ஒரு வித விழிப் புணர்வுகளையும் ஏற்படுத்தும் நோக்கில் கிராமம் கிராமாக இக் கூட்டங்க்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் காரை மத்தி கிராமத்தில் இன்றும் காரை தென் மேற்கு கிராமத்தில் நாளையும் விளக்கக் கூட்டங்கள் நடைபெற வுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (உ-246)

## யுனிசெவ் உபபணிமனை வன்னியில்

(கொழும்பு)

யுனிசெவ் நிறுவனம் கிளிநொச் சியில் உபபணிமனை ஒன்றினை அமைத்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் கண்ணி வெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகள் உட்பட ஏனைய வேலைத்திட்டங் களை முன்னெடுப்பதற்கு ஏதுவாக இவ் உபபணிமனை அமைக்கப்பட் டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி களில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளை நடை முறைப்படுத்துவதற்கு மேற்படி நிறுவனத்தின் பிரதான பணிமனை கிளிநொச்சியில் நிறவப்படும் வரை இவ் உபபணிமனை இயங்க வுள்ளது. (உ-8)

## கர்மாரம்ப பூசை

(அராலி)

வட்டுக்கோட்டை உடுக்கி வளவு மகஷா கணபதிப்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கர்மாரம்ப பூசை எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (உ-214)

## உயர் தேசிய டிப்ளோமா

## கற்கை நெறி நிறைவு செய்தோர்க்கு லண்டன் நிதிநிறுவன அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)


தொழில் நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 4 ஆண்டு காலக் கற்கை நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு லண்டன நிதியியல் கணக்காளர் நிறுவகத் தினால் அங்கீகாரம் வழங்க இணக் கம் காணப்பட்டுள்ளது.

இதன் மூலம் மேற்படி கற்கை நெறியை நிறைவு செய்தவர்கள் லண்டன் நிதியியல் கணக்காளர் களாக அனுமதிக்கப்படுவர்.

இதற்கான விண்ணப்பப்படிவங் களை பரிசீலனை செய்து தகுதியா னோரை தெரிவு செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினமும், நேற்றும் நடைபெற்றுள்ளது.

அத்துடன்,லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இவ்விரு நாட்களிலும் ஆலோசனை வழங்கி வருகிறாார்.


இதேசமயம் என்.சி.ஏ.ரீ கற்கை நெறி முடித்தவர்கள் லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகப் பரீட்சைக் குழு மத்தியன் நிதியியல் தொழில் நுட்பவியலாளராகவும் ஐ.ஏ.பி யின் கூட்டிணைக்கப்பட்ட கணக்குப் பதிவாளராகவும் அங்கீகரிக் கப்படுவர் எனவும் கூறப்படுகிறது. (உ-10)



நல்லூர் ஆனந்த வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் போது யாழ். கல்விவலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. க. சுப்பிரமணியம் பரிசில் வழங்குவதையும் வித்தியாலய அதிபர் ஆ. சிவராசா பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கு. சிவஞானம் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்



நாவற்குழி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில், மோட்டர் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ. பத்மநாதனும், யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா. இளம்பிறையன் மங்களவிளக் கேற்றுவதையும் மற்றும் பாடசாலை அதிபர் பி. முத்துலிங்கம் அருகில் நிற்பதையும் காணலாம்.



பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயாகர் தேர்த்திருவிழாவிவேல சித்திவிநாயகர் தேறேறி வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம். இச் சித்திவிநாயகராலயம் பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

படம் : பரு. நிருபர்

# ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கத் தயங்கோம்

## அமைச்சர் எஸ். பி.எச்சரிக்கை

(கொழும்பு)



அரசாங்கத்தை கலைப்பதற்கு ஜனாதிபதி முயற்சி செய்வாரானால் அதற்கு நாம் எந்தவகையிலும் இடமளிக்கப்போவதில்லை.

இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளும் பட்சத்தில் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைக்க தயங்க மாட்டோம்.

இவ்வாறு கமத்தொழில் கால் நடைவளர்ப்பு அமைச்சர்எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அங்குராங்ஹெட்டவில் நடமாடும் கமத்தொழில் சேவையினை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து பேசிய போதே அமைச்சர் திஸநாயக்கா இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

20 வருடங்களாக தணிகக முடியாத யுத்தத் தீயை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசு குறுகிய காலத்தில் தணித்துள்ளது.

அத்துடன்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டைச் சரியான திசையில் வழிநடத்துகிறார்.எனபதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியவிடயமாகும் என்றார். (உ-10)

# இந்து மாநாட்டை ஒட்டி கொழும்பில் கண்காட்சி

(கொழும்பு)

இரண்டாம் உலக இந்து மாநாடு 2003 மே மாதம் 22ஆம் 5ஆம் திகதிகளுக்கிடையில் கொழும்பில் மிகப் பாரியளவில் நடைபெறும் காலத்தில் இந்து மாநாட்டை ஒட்டிதாக, இந்து நாகரிகம் சம்பந்தமாக கணகாட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள கல்யாண மண்டபத்தில் இடம் பெறும்.

இந்து சமயம்,இந்து நாகரிகம் முதலியவற்றின் சிறப்பினை விளக்கத்தக்க நூல்கள், ஏட்டுச் சுவடிகள் ஓவியங்கள்,சிற்பங்கள், தொல்பொருட்கள், புகைப்படங்கள்முதலானவற்றை அடக்கும் வகையிலான இக்கண் காட்சிக்குப் பொருத்தமானபொருட்கள் வைப்பதற்கு உரியவர்களின் அனுசரணை கோரப்பட்டுள்ளது.

காட்சிக்கு வைககபபடும் பொருட்கள் கவனமாகப் பேணப்பட்டுத் திருப்பிக் கொடுக்கப்படும் எனவும் பொருட்கள் உரியவர்களின் பெயர்களோடு காட்சிக்கு வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தென்னாபிரிக்கா செல்ல ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம

(மண்கும்பான்)

கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரை யாழ். கல்வி வலய தமிழ்த் துறைப் பணிப்பாளர் சிறி தயாளன் தலைமையில் உயர்தர தமிழ் ஆசிரியர்களுக்கான செயலமர்வுயாழ்வலயக் கல்விப்பணிமனையில இடம்பெற்றது.

இச் செயலமர்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார்.

100 ஆசிரியர்கள் வரையில் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர். இதில் மாணவர்களுக்கான் கற்பித்தல் மற்றும் ஒப்படைகள் சம்பந்தமான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேற்படி செயலமர்வில் உரையாற்றிய தமிழ்த்துறைப் பணிப்பாளர் சிறிதயாளன் தெரிவிககையில், தென்னாபிரிக்காவில் தமிழர் தேசிய பேரவை மாநாடு ஒன்று நடை பெறவிருப்பதாக்வும் மேற்படி பேரவையில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்களுக்கான விசா ஒழுங்கைத் தாம் செய்து தருவதாகவும் ஏனைய செலவுகளை அவர்கள பொறுப்பேற்கும் படியும் கூறினார்.

அனைத்துச் செல்வுகளையும் திணைக்களம் பொறுப்பேற்கும் சமயத்தில், தென்னாபிரிக்கா சென்று வரமுடியுமென ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-55)

# கண்ணிவெடியை அகற்ற 300 அமெ. டொலர்கள் செலவு

## புதைக்க 3 அமெ.டொலர்கள் மட்டுமே

(கொழும்பு)

மிதிவெடியொன்றைப் பெற்றுப் புதைப்பதற்கு செலவிடும் பணத்திலும் பார்க்க அதனை பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி அகற்றுவதற்கே அதிக அமெரிக்க டொலர்கள் தேவைப் படுகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மிதிவெடி ஆலோசனைக் குழுவின் மடடக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திரேசா ரவறஸ்

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு மிதி வெடியைப் பெற்றுப் புதைப்பதற்கு ஆகக்குறைந்த பணமாக 3 அமெரிக்க டொலர்களே செலவாகின்றன. ஆனால்,அதனை அகற்றுவதற்கு 100 தொடக்கம் 300அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன்.

மிதி வெடி ஆலோசனைக்குழுவானது அனைத்துலக தொண்டர் நிறுவனமாகும். இது உலகில் 20 நாடுகளில் மிதிவெடி ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வுகளை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. அத்துடன் மிதி வெடிகளை அகற்றும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில், இலங்கையில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் இந் நிறுவனம் செயற்பட்டு வருவதுடன், வன்னி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தனது பணிகளை ஆற்றி வருகிறது.

அத்துடன்,இதற்கான ஆளணியினரிற்கு பயிற்சி வழங்கும் பணி கொழும்பில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் குறிப்பிடடார். (உ-10)

# எமது மதத்தை நாமே இழிவு படுத்துவது மதமாற்றத்திற்கு வழிவகுத்து விடும்

## நல்லை ஆதீன முதல்வர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

மேன்மையான சமயம் எமது சைவ சமயம்.இதன் மூலமாக விளங்கும் இடம் ஆலயங்களும் சிவாச்சாரியர்களும் ஆகும்.சிவாச்சாரியங்களும்வழிபாட்டுக்குரிய ஆலயங்களும் சைவ சமயத்தில முதன் மையாகப் போற்றப்படுவதாலேயே எமது சமயம் தானாக வளர்ந்து இன்று உலகளாவியதாக இருக்கிறது.

இவ்வாறு சிவராத்திரி தினத்தன்று நல்லூர் சிவன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் தெரிவித்தார்.

ஆதீனமுதல்வர்தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கலாசாரத்தை வளர்க்கும் இடமாக ஆலயங்கள் மிளிர்கின்றது. சைவ அன்பர்கள், சமய பரிசாரகர்கள் எமது சமயத்தின் உண்மைக் கருத்துக்களை இன்றைய உலகம் அறியும் படியாக வெளியிடவேண்டும்.

இதை விடுத்து அண்மைக் காலத்தில் சில சமய பிரசாரகர்கள்,பேச்சாளர்கள் ஆகியோர் சமயத்தில், ஆலயங்களில் சிவாச்சாரியர்களில் குறைபாடுகளைக் காண்பது போல் பொது மேடைகளில் பேசி வருகின்றார்கள்.

இவ்வாறு பேசுவதன் மூலம் சமயப் பணி செய்து வரும் சிவாச்சாரியர்களின் மனமும் சைவ, அன்பர்களின் மனமும் வேதனைப்படுகின்றது.பொதும் பாதிக்கவும்படுகின்றது.

இதனை நாம் தவிர்க்க வேண்டும். இதனை சமய பிரசாரசர்கள் மனத்தில் கொண்டு பிரசாரம் செய்ய முன்வர வேண்டும்.



இவ்வாறு நாம் பேசுவதன் மூலம், எமது சமயத்தை நாமே குறை கூறுவதாகவும் மற்றய சமயத்தவர் எம் குறைகளை கண்டு இழிவு படுத்தவும் மத மாற்றத்திற்கும் வழி ஏற்படுகின்றது என்று குறிப்பிட்டார்.(உ)

# ஐ.தே. கட்சியில் அங்கம் பெற பீரிஸ் உட்பட 8 பேருக்கு தடை

## நீதி மன்றம் உத்தரவு

(கொழும்பு)

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பரிஸ் உட்பட 8 பேருக்கு ஐக்கிய தேசியக கட்சியில் அங்கத்துவம் வழங்கக் கூடாது என கொழும்பு மாவட்ட நீதி மன்றம் நேற்று முன்தினம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. இத் தடை உத்தரவு நேற்று வரை அமுலில் இருக்கும் மென தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீ லங்கா சுதந்திர தேச பிரேமிஸ அமைப்பின் சார்பாக எதிரிவீர பிரேமரத்தினா தாக்கல் செய்திருந்த மனுமீதே மாவட்ட நீதிபதி இத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இம்மனுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா,தவிசாளர் மலிக் சமரசிங்கா, செயலாளர் சரத் கப்பு கொட்டுவ ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர தேச பிரேமிஸ அமைப்பும் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இணங்கவே ஐக்கிய தேசி முன்னணிஉருவாக்கப்பட்டதாகவும் மனுதாரர் தெரிவித்துளளார்.

இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்,எஸ்.பி.திஸநாயக்கா, மகிந்த விஜயசேகரா மற்றும் பந்துல குணவர்த்தன,ரெலிக்கொம் நிறுவனத்தலைவர் திலங்க சுமதிபால,பிரதி அமைச்சர் ஜெயசுந்தர விஜயக்கோன் உட்பட 8 பேர் இன்று கண்டியில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியில்அங்கத்துவத்தை பெறவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## தொண்டர் ஆசிரியர்களின்

# நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி நேற்று பகிஷ்கரிப்பு ,மௌனப் பேரணி

## வடக்கு- கிழக்கில் 1800 பாடசாலைகள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற பகஷ்கரிப்பு மற்றும் மௌனப்பேரணி காரணமாக வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்துத் தமிழ்பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்தன.

வடக்கிழக்கில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல் உள்ளிட்ட 8அம் சஙகக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட இந்த மௌப்பேரணி நேற்று யாழ. குடா நாட்டில் யாழ்வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முன்பாக மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி,மததிய பேருந்து நிலையம், முனீஸ்வரன் வீதி, பிரதான வீதி, கண்டிவீதி ஊடாக யாழ்மாவட்டச் செயலகத்தைச்சென்றடைந்தது.

அங்கு கண்டனப் பொதுக்கூட்டம் இடம்பெற்று முடிவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் கருணா சேனகொடித்துவக்குஆகியோருக்கான மகஜர்கள் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் இலங்கைத்தமிழர்ஆசிரியர் சங்கத்தலைவர் ஆ.பஞ்சலிங்கம், தொண்டர் ஆசிரியர் சங்கத்தலைவர் கி. இந்திரகுமார்ஆகியோர் கையளித்திருந்தனர்.

யாழ். மாவட்டத்தொண்டர்ஆசிரியர் சங்கம்,உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம், பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம்,வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், கடல்வள மீன் பிடியில் டிப்ளோமா சங்கம் ஆகயவற்றைச் சேர்ந்த பல நூற்றுக்கணக் கானோர் இப்பேரணியில் பங்கு கொண்டனர்.

இதேவேளை,வடக்கு-கிழக்கு மாகாணம் பூராகவும் இடம்பெற்ற ஆசிரியர்களின் இந்த பகிஷ்கரிப்பு மற்றும் மௌனப்பேரணி காரணமாக ஆயிரத்து800பாடசாலைகள் செயலிழந்ததுடன், 6 இலட்சம் மாணவாகளின் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

தவிர,17 ஆயிரத்து 290 ஆசிரியர்கள் இந்தப் பகிஷ்கரிபபல் ஈடுபட்டனர். (உ-4,7,77,43,)

# கனேடிய அமைச்சரின் இலங்கை விஜயம் ரத்து

(கொழும்பு)

கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில்கிரேமும் அவரது குழுவினரும் இன்று புதன்கிழமை இலங்கைக்கு மேற்கொள்ள விருந்த உத்தியோக பூர்வ விஜயம் ரத்துச் செயயப்பட்டுள்ளதாக கனேடியத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கை வந்து இரண்டு நாள் தங்கியிருப்பார் எனவும் அவ்வாறு தங்கியிருக் கும்இரண்டு நாட்களிலும் ஜனாதி பதி,பிரதமர் மற்றும் தமிழீழ விடு தலைப்புலிகளின் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்திப்பார் எனவும்முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது வளை குடாவில் ஏற்பட்டுள்ள போர்அச்சுறுத்தல்சூழ்நிலை காரணமாகவே இவரது இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை,இலங்கைவிஜயம் முடித்துக் கொண்டு மாலைதீவு, இந்தியா போன்ற நாடுகளுக்கும் இவ்விஜயம் செய்வார்எனமுன்னர்கூறப்பட்டிருந்தமையும்இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# பண்டிகையை ஒட்டி பாதுகாப்பு உறுதிப்பாடு

(கொழும்பு)

வளைகுடாவில் போர் ஏற்படாது விட்டால், இலங்கை மக்கள் தமிழ், சிங்களப் புத்தாண்டை இவ்வாண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள் என இலங்கைத் தேசிய கைத்தொழில் சபையின் தலைவர் றஞ்சித் கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில், அரசாங்க ,தனியார் வர்த்தக அமைப்புக்கள் புதுவருடப் பண்டிகைக்குத் தேவையான பண்டங்களையும்பொருட்களையும் ஏற்கனவே சேகரிக்கத் தொடங்கிவிட்டன.

அத்துடன், பெரும் போக விளைச்சல் இம்முறை சிறப்பாக இடம் பெற்றிருப்பதால் அதுவும் பண்டிகையினை விமரிசையாகக் கொண்டாட வழிவகுத்துள்ளது.

இலங்கையில் வடக்கு -கிழக்கு உள்ளிட்ட பகுதிகளுக்கும் புத்தாண்டு புண்டிகை தினத்தை முன்னிட்டு அத்தியாவசியப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் புத்தாண்டு. தினத்தைமுன்னிட்டு தமது பணிகளை மேலும் விஸ்தரிக்கும் என்று மேற்படி நிலையத் தலைவர் லால் விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம்,கூட்டுறவு விற்பனை நிலையக்கிளைகள் இல்லாத இடங்களில் நடமாடும் சேவையை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இதே சமயம் பண்டிகையை முன்னிட்டு கொழும்பிற்கு வரும் பாவனையாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிறேமலால் றணகல கூறியுள்ளார்.

நுகர் வோரின் முறைப்பாடுக்ளை பதிவு செய்வதற்கும் வர்த்தக நிலையங்களை பரிசோதனை செய்யவும் அதிகாரிகள் நியமிக்கப்படும் என உள்நாட்டுவர்த்தகஆணையாளர்திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-10)

## இன்று ஒரு தகவல்

### நடக்கும் பழக்கம் நன்று!

காலை நேரம் கடற்கரை ஓரம் காலையும் கையையும் வீசிக் கொண்டு ஏதோ சண்டைக்குப் போகிற சிப்பாய் மாதிரி எல்லாரும் உலாவப் போய்க் கொண்டிருந்தார்கள். அதிலே எனக்குத் தெரிந்த ஒருவர் மிகவேகமாக எதிரில் வந்தார். என்ன சார்? வாங்கிங்கா? என்று கேட்டேன். அவரால் ஆமாம் என்று பதில் சொல்ல முடியவில்லை. அவ்வளவு கஷ்டம். மூச்சு விடுவதற்கே வாயைத் திறந்து, திறந்து மூடிக் கொண்டிருந்தார். எங்கே பேசுவது? கொஞ்சம் நின்று நிதானித்து மூச்சுவிட்டு விட்டு அதன் பின்னர் ஆமாம் என்று சொன்னார். என்ன சார் இவ்வளவு வேகம் என்றேன்.

''உங்கள் பேச்சைக் கேட்டுவிட்டுத்தான் சார் நடக்க ஆரம்பித்தேன். ஒருநாள் இன்றொரு தகவலில் கேட்டேன் நடப்பது நல்லது என்று!. அன்றிலிருந்து ஆரம்பித்து விட்டேன். ஆனாலும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இப்போது பாருங்கள் உங்களிடம் சுலபமாகப் பேச முடியவில்லை. மூச்சு வாங்குகிறது. உடம்பு கூட வலிக்கிற மாதிரி இருக்கிறது'' என்றார்.

''உங்களை யார் இவ்வளவு வேகமாக நடக்கச் சொன்னது? வேகத்தைக் குறைத்து மெதுவாக நடவுங்கள்!'' என்றேன். ''நீங்கள் நடப்பதனால் என்னென்ன சௌகரியம் என்று அன்றைக்குச் சொன்னீர்களே தவிர, சௌகரியமாக நடப்பது எப்படி என்று சொன்னீர்களா சார்?'' என்று இப்போதும் இலேசாக மூச்சுவாங்கிக்கொண்டே சொன்னார் அவர். மூச்சு வாங்கிக்கொண்டே சொன்னால் கூட இவர் சொல்வதிலும் ஒருநியாயம் இருக்கிறது. அதனால் நடைபோடுகிறவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கியமான குறிப்புகள் என்னென்ன என்பதை இன்றைக்குத் தெரிந்து கொள்ளலாம்.

உங்கள் வயது நாற்பதுக்குமேலா? உங்கள் எடை இருக்க வேண்டியதைவிடப் பத்துக்கிலோ அதிகமாக இருக்கின்றதா? நீங்கள் புகை பிடிக்கின்றவரா? இதயநோய் - இரத்த நாள நோய் - உயர் இரத்த அழுத்தம் இப்படி ஏதாவது உங்களுக்கு உண்டா? அப்படியென்றால் நீங்கள் உங்கள் இஷ்டத்திற்கு வரிந்து கட்டிக்கொண்டு 'வாக' போக ஆரம்பித்து விடாதீர்கள். முதலில் ஒரு மருத்துவ பரிசோதனை பண்ணிக்கொள்ளுங்கள். அதுதான் நல்லது.

நடக்கின்றபொழுது, உடற்பயிற்சி செய்கின்ற பொழுது மார்புப்பகுதியில் அல்லது வேறு எங்கேயாவது தொடர்ந்து வலி இருந்தால் பயிற்சியை நிறுத்திவிட்டு டாக்டரைப் போய்ப் பாருங்கள். நடைபோகின்றபொழுது உங்கள் சக்திக்கேற்றாற் போல மெதுவாக அதிக கஷ்டமில்லாமல் முன்னேறுங்கள், அங்கு என்ன போட்டியா வைக்கின்றார்கள்? முந்திக் கொண்டு போய்ப் பரிசுவாங்குவதற்கு?

தொந்தரவு கொடுக்காத ஷூ, உடைகளை உபகோப்படுத்துங்கள், பாதத்திலே, ஆடுதசையிலே ஏதாவது பிரச்சினை இருந்தால் டாக்டரைப்பாருங்கள். வெய்யில் காலமாக இருந்தால் தலைக்குத் தொப்பி போட்டுக் கொள்ளுங்கள். பனியில் நடந்தாலும் அப்படித்தான்! தலையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நம்மிடம் ஏதோ கொஞ்சம் உருப்படியாகத் தெரிவது அவைதான். உடற்பயிற்சி முன்போ, பின்போ, பயிற்சி செய்கின்றபோதோ நிறையத் தண்ணீர் குடிக்கலாமாம்.

முதல் ஒரு மாத்திற்குக் கொஞ்சம் தளர்த்தியாக... சாவகாசமாக நடக்கலாம். மணிக்கு மூன்று அல்லது நான்கு கிலோமீற்றர் வேகம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் வேகத்தை அதிகப்படுத்தலாம். மணிக்கு ஆறு அல்லது எட்டுகிலோமீற்றர் அளவுக்கு நடக்கலாம். நன்றாகக் கையை வீசிக் கொண்டு நடக்கவேண்டும். மூச்சுவிடுகின்ற எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். இப்படி ஒரு முப்பது நிமிடம் நடக்கலாம். தனியாக நடந்து போவதற்கு என்னவோ மாதிரி இருந்தால், கூடயாரையாவது சேர்த்துக் கொள்ளுங்கள். ஒரு கூட்டமாகக் கூடப்போகலாம். நடப்பதென்பதை ஒருசந்தோஷமான சமாச்சாரமாக ஆக்கிக்கொள்ளுங்கள். தினமும் இப்படி நடக்க வேண்டியிருக்கிறதே என்று புலம்பிக்கொண்டு போகாதீர்கள்.

சிலர் நடக்கின்ற பொழுது, கடந்தகாலங்களை அசை போட்டுக் கொண்டே போவார்கள். சிலர் வருங்காலத்தை அசை போட்டுக் கொண்டு போவார்கள், சிலர் முக்கியமான திட்டங்களை இப்படி நடக்கிறபோதுதான் தீர்மானிக்கிறார்கள். நடப்பதனால் மன இறுக்கம் குறைகின்றது, பரபரப்புக் குறைகின்றது.

மன ஆற்றல் பெருகுகின்றது. தன்னம்பிக்கை வளர்கின்றது. முதுமை தள்ளிப்போகின்றது. செயல்திறன் அதிகரிக்கின்றது. இவைதவிர உடம்புக்கும் பலவிதமான சௌகரியங்கள் ஏற்படுகின்றது. அதனால், இதுவரையும் நடக்க ஆரம்பிக்காத வர்கள் இன்றைய தகவலில் உள்ள குறிப்புகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பத்துவிடலாம்.

சார்லஸ் லேம்ப்- ஆங்கில இலக்கியமேதை, அவர் ஒருமுறை உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனாராம். டாக்டர் அவரைப் பார்த்துவிட்டு ''நீங்கள் தினமும் காலையில் வெறும் வயிற்றில் நடக்கவேண்டும'' என்றாராம். ''வெறும் வயிற்றில் நடப்பதற்கு நான் தயார். ஆனால் வயிறு கிடைக்க வேண்டுமே, யாரின் வயிற்றின் மேல் நடப்பது டாக்டர்?'' என்று கேட்டாராம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அரசைக் கவிழ்க்க சரியான தருணம் இதுவே

## தினேஷ் பகிரங்கமாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்ட காலத்தில கொண்டு வராத பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை அரசுட்ன் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு மக்கள ஐக்கிய முன்னணியின் தலைவரும், எம் .பியுமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் 18வது தேசிய மாநாடு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

அம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே இவ்வாறு தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய தினேஷ் குணவர்த்தன,

கடந்த 20வருடங்களாகத தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்தக குறுகிய காலப்பகுதியில் அவர்களது போராட்டம் பெரும வளர்ச்சி கண்டுள்ளது.

அவர்களது போராட்டம்பெருவளர்ச்சி கண்டாலும் பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைக் கடந்தகால போர் முனைகளில்அவர்கள்பயன்படுத்தவில்லை.

ஐக்கிய தேசிய முன்னனி அரசாங்கம் நாட்டைத் துண்டாடி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தாரைவார்த்துக்கொடுக்கும முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இச்சமயத்தில் தாய் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் நாட்டின் மீது பற்றுள்ள அனைவருக்கும ஏற்பட்டுள்ளது.

இதற்போது நாட்டின் அரசியலில மட்டுமன்றி பொருளாதாரத்திலும் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

அதாவது அபிவிருத்தி எனும் பெயரில வெளிநாடுகளில் இருந்து பெரும தொகையான நிதியை அரசு கடனாகப் பெற்று, விடுதலைப் புலிகளின் கட்டப்பாட்டுப் பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் காட்டி வருகிறது.

முக்கிய கேந்திரநிலையங்கள், தொழில் வாய்ப்புகளை வழங்குகின்ற அரச கம்பனிகள் என்பவற்றை வெளிநாட்டுத் தனியார் கம்பனிகளுகக்கு அரசு விற்பனை செய்து வருகிறது.

இந்நிலையில நாட்டைக் கட்டிக் காக்கும் பொருட்டு அனைவரும் ஒன்றிணைந்து புதிய கட்சி ஒன்றைமைப்பதற்கும், இவ்வரசைக் கவிழ்ப்பதற்கும் சரியான தருணம் கிடைத்து வருகிறது எனத் தெரவித்தார்.(உ-8)

## கைதிகள் விடுதலை விவகாரம்

# நீதித்துறைப்பிரமுகர்களை பிரதமர்சந்தித்துப்பேசுவார்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகள் முன்வைத்த கோரிக்கை தொடரபாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நீதித்துறை உயர் அதிகாரிகளை விரைவில் சந்தித்துப் பேசவுள்ளதாக சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சமாதான செயலகத்தின் பொறுப்பாளர் பேர்னாட் குணதிலக கருத்துக் கூறுகையில்,

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பந்தத்தின் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 542பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 103பேர் மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 103பேரும் வெலிக்கடை, திருகோணமலை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு, களுத்துறை, யாழ்ப்பாணம், அனுராதபுரம், மகசின் ஆகிய இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, களுத்துறையில் தற்போது உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் கைதிகளால் முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளையும் பற்றிய தீர்மானத்தை நீதித்துறையே எடுக்க வேண்டும்.

இதேவேளை, கடந்த 7ஆம் திகதி மன்னார் ஆயர் மற்றும் பேர்னாட குணதிலக ஆகியோர் களுத்துறை சிறைக் கைதிகளை நேரில் சென்று பார்வையிட்டு திரும்பியமை தெரிந்தமையே. (உ-10)

## இராசி பலன்

**12.03.2003**

**(மாசி 28, புதன்)**

| | |
|---|---|
| நவமி | மு.இ 10.48வரை |
| திருவாதிரை | முழுவதும் |
| இராகுகாலம் | 12.23 - 1.53 |
| நல்லநேரம் | 4.53 - 6.23 |

**மேடம்**
புதிய பொருள் சேர்க்கை, நற்கீர்த்தி, மனோதைரியம், ஜனவசியம்.

**இடபம்**
அதிகசெலவு, மனோசங்கடம், எந்தக் காரியத்திலும் தாமதம், கௌரவக்குறைவு.

**மிதுனம்**
வெகுமானம், நல்லமுயற்சி, சயன சுகம், விருந்துபசாரம்.

**கடகம்**
எதிர்பாராத அச்சம், சோம்பல், முயற்சி தடங்கல், தர்மம்.

**சிங்கம்**
நல்லகாரியம், ஜனவசியம், தொழில் லாபம், பெருமை.

**கன்னி**
நன்கொடை, மரியாதை, இஷ்டசித்தி, செய்தொழில் விருத்தி.

**துலாம்**
நிர்ப்பந்திக்கப்படல், வயிற்றுவியாதி, தேசாந்திரவாசம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
உடல்வியாதி, மனக்கவலை, காரிய தடங்கல், வாகனபயம்.

**தனுசு**
அமைதியானநிலை, பிரயாணநன்மை, தேகசௌக்யம், நல்ல உணவுகிடைத்தல்.

**மகரம்**
ஆசைப்பட்ட பொருள் கிடைத்தல், ஆரோக்கியம், தொழில் விருத்தி, முயற்சி பலிதம்.

**கும்பம்**
தாழ்ந்த நிலை, வழியில் இடையூறு, புத்திரரால் கவலை, ரோகநிலை.

**மீனம்**
புத்திசஞ்சலம், முயற்சி தாமதம், உறவினர் உதவி, கெட்டபெயர்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# கரையோரப் பாதுகாப்புக்கு ஆசிய அபி. வங்கி நிதி உதவி

(கொழும்பு)

நாட்டின் கடற்கரைப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக ஆசியஅபிவிருத்தி வங்கி 8 கோடி டொலர்களை வழங்க முன் வந்துள்ளது.

இது தொடர்பாக கரையோரப் பாதுகாப்புப் பணிப்பாள்ஆர். ஐ.பி.சி சமரநாயக்கா கருத்து வெளியிடுகையில்,

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படவுள்ள இந்நிதியினைப் பயன்படுத்தி நான்கு கட்டங்களாக கரையோரப் பாதுகாப்புத்திட்டங்கள் அமுல் செய்யப்படவுள்ளன.

கடற்கரைகளில் கல்வேலி அமைத்தல், மீன்பிடித்துறை முகங்களை அபிவிருத்திசெய்தல், கரையோரச் சுற்றாடல்பாதுகாப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவை இத்திட்டங்களில் அடங்கும்.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட களப்புகள், கழிமுகங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதுடன், இத்துறை சம்பந்தமான கல்வி நிறுவனங்களின் தரத்தை உயர்த்தவும் அவற்றில் புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்யவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ-10)

## யுத்தப் பாதிப்புக்குள்ளான

# பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தியாகும்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யப் பாடசாலைக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் கட்டட அமைப்பு தளபாட வசதிகள், உபகரணங்கள், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மற்றும் இம் மாகாணங்களின் எல்லைப்புறங்களில் உள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (உ-8)

# சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் குறித்து விளக்கம்

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அனுசரணையுடன், சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கிக்கூறப்படவுள்ளது.

இதற்குத் தேவையான நிதி மற்றும் சகல உதவிகளையும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இவ்விளக்கங்களை நடத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதன் முதலாவது விளக்கக் கூட்டம் திருகோணமலையில் நடைபெறவுள்ளது. (க-8)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.
-குறள்-

## வலம்புரி

### கேள்விக்குறியாகும் சமாதானம்

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பலை இலங்கைக் கடற்படையினர் தாக்கியதில் கப்பல் கப்டன் உட்பட 11போராளிகள் வீரச்சாவடைந்தனர். சமாதானச் சூழ்நிலையில் இத்தகைய சம்பவங்கள் பெரும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினர் நடந்து கொண்ட பொறுப்பற்ற தன்மையினால், 3போராளிகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

நெடுந்தீவுச் சம்பவத்தின் பின்னர் கடற்படை நிதானமாக நடந்து கொள்ளும் என்ற உத்தரவாதங்கள் படைத்தரப்பால் வழங்கப்பட்ட போதும், அவை செவ்வனே நடைமுறையடுத்தப்படவில்லை.

கடற்படை நெடுந்தீவில் நடந்து கொண்ட யுத்த நிறுத்த மீறலைத் தொடர்ந்து மானிப்பாயில் இராணுவத்தினர் பெண் புலிப்போராளிகளை கடுமையாகத் தாக்கி நிலைமையை மோசமடையச் செய்தனர்.

அது விடயத்திலும் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிக்குக் குந்தகம் ஏற்படாதவாறு பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டனர்.

யுத்த நிறுத்த மீறல்களைக் கண்காணிப்பதற்கென கண்காணிப்புக் குழு இருக்கின்ற போதிலும், விடுதலைப் புலிகளுக்கெதிரான படையினரின் நடவடிக்கைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

அதன் உச்சக்கட்டமாக விடுதலைப் புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வந்து கொண்டிருந்தபோது அக்கப்பல் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலால் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதோடு 11 புலிப்போராளிகளும் வீரச்சாவடைந்துள்ளனர்.

அரசுக்கும், புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போது கடற்படை நடந்து கொள்ளும் விதம் சமாதான முயற்சியைக் குழப்பும் நோக்குடையது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த கப்பல் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பாதுகாப்பு அமைச்சர் திலகமாரப்பனவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டதையும் அதனால் விடுதலைப் புலிப் போராளிகள் 11 பேர்வீரச்சாவடைந்ததையும் புலிகள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். இந் நிகழ்வு மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்ச்செல்வன் எழுதிய கடிதம், சர்வதேசக்கடற்பரப்பில் நடந்த சம்பவம் சமாதான முயற்சியில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை துலாம்பரப்படுத்தியுள்ளது.

# பாதுகாப்புச் சபையில் யு.எஸ். தீர்மானம் நிறைவேறுமா, தோற்கடிக்கப்படுமா?

ஈராக் இன்னும் ஒளித்து வைத்திருப்பதாகக் கருதப்படும் பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைக் களைவதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் முன்மொழிந்துள்ள புதிய தீர்மானத்தில் 17 ஆம் திகதி கடைசித்தினமாக காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அபாயகரமான இரசாயன, உயிரி அணுஆயுதங்களை ஈராக் இன்னமும் ஒளித்து வைத்திருப்பதாக அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் குற்றஞ்சாட்டி வருகின்றது. ஆனால் ஈராக் இதனை பல தடவைகளிலும் மறுத்து வந்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மீது இந்த வாரத்தில் வாக்கெடுக்கப்படுவது நிச்சயம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு 9 நாடுகளின் ஆதரவு இருந்தால் போதும். ஆனால் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகளில் எதுவும் தனது ‘வீட்டோ’ (இரத்து) அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவையே நிரந்தர உறுப்பு நாடுகளாகும்.

பிரான்ஸ் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தக் கூடும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கருதுகின்றார்.

தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் பேசிய கொலின்பவல் தீர்மானத்தின் காலக்கெடுவை ஆதரவு தேடுவதற்காக மாற்றப்போவதில்லை என்றும் ஆனால் தீர்மானத்தின் வாசகத்தில் ஏதும் மாற்றம் செய்யலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் உறவுகள் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிக ஸ்திரமாக இருந்து வந்துள்ளதாகவும், ஆனால் வீட்டோ அதிகாரத்தை அது அமெரிக்கத் தீர்மானத்தின் மீது பிரயோகிக்குமானால் கடும் எதிர் விளைவுகளுக்கு இடமளிக்கும் என்றும் பவல் கூறியுள்ளார்.

இரு தரப்பு உறவுகளை அது வெகுவாகப் பாதிக்கும். உலகின் பல பகுதிகளில் பிரான்சிற்கு சார்தகமான நிலைமைகள் இல்லாமல் போய்விடும் என்றார் அவர்.

### ஹிட்லருக்கு ஒப்பானவர்

அதேசமயம் அமெரிக்க, ஜெர்மன் உறவுகள் ஏற்கனவே பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. கடந்த வருடம் ஜெர்மன் நீதி அமைச்சர் ஹேர்டா டோப்லர் கெமலின் அதிபர் புஷ்ஷின் அரசியல் நடவடிக்கைகளை நாசா சர்வாதிகாரி அடோல்: ஹிட்லரின் கொள்கைகளுடன் ஒப்பிட்டுப் பேசியிருப்பது ஏற்கனவே இருநாட்டு உறவுகளைப் பாதித்துள்ளது. இப்பொழுது ஜெர்மன் அதிபரின் போர் எதிர்ப்புக் கொள்கை அமெரிக்காவை மேலும் ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கும் என்று கூறத் தேவையில்லை.

கடுமையான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக பாதுகாப்புச் சபை இருக்கவேண்டும்என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திருமதி கொன்டலீஸா றைஸ் கூறியுள்ளார். ருவாண்டா, கொஸ்சோவோ போன்ற பிரச்சினைகளில தலையிடாமல் இருந்ததனால் ஏற்பட்டுள்ள குறையை பாதுகாப்புச் சபை சரி செய்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்திருக்கிறது என்று அவர் கூறினார்.

ஐ.நா.வின் கௌரவம் ஆபத்தில் உள்ளது என்று அமெரிக்க அதிபர் புஷ் அடிக்கடி கூறிவரும் அதேசமயம் ஐ.நா. ஆதரவு கிடைக்காது போனாலும் பாதுகாப்புச் சபையைப் புறக்கணித்துவிட்டு ஈராக்கிற்கு எதிராக கூட்டுப் படைகளை முன்நடத்துவதற்குத் தயாராய் இருப்பதாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான், சில்லி, மெக்ஸிக்கோ, அங்கோலா, கமரூன், கினி ஆகிய நாடுகளின் ஆதரவை நாடுவதில் அமெரிக்காவுடன் பிரிட்டன், ஸ்பெயின், பல்கேரியா ஆகிய நாடுகளும் சேர்ந்து கொண்டுள்ளன.

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் தங்கள் பணிகளின் முன்னேற்றங் கண்டு வருகிறார்கள். அதனால் அப்பணியை அவர்கள் தொடர வேண்டும் என்று பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் கூறுகின்றன. இந்தக் கருத்தை ஜெர்மனியும் சிரியாவும் ஆதரிக்கின்றன.

### காட்டர் எதிர்ப்பு

இதற்கிடையில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும் நொபேல் பரிசு பெற்றவருமான ஜிம்மிகாட்டர் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அமெரிக்காவிற்கு ஈராக்கிடமிருந்து நேரடியாபத்து இல்லை. எனவே ஒரு தலைப்பட்சமாக ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதானது ‘நியாயமான போர்’ என்ற தரங்களுக்கு அமைவாக மாட்டாது என்று கூறியுள்ளார்.

## அமெரிக்காவின் பணபலம் எந்தளவிற்குப் பயனளிக்கும்?

தாக்குதலானது அப்பிராந்தியத்தை ஸ்திரத்தன்மையற்றதாக்கிவிடும். அமெரிக்காவிற்கு எதிரான பயங்கரவாதத்திற்குத் தூபமிடும். ஐ.நா.சபையின் நிலையைத் தாழ்த்திவிடும் என்று காட்டர் கூறியுள்ளார்.

ஐ.நா.வைப் புறக்கணித்தால் அமெரிக்கா சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்பட்டு விடும். அமெரிக்க ஆயுத சேவைகள் குழுவில் ஜனநாயகக் கட்சி உறுப்பினரும் மிச்சிக்கன் செனேட்டருமான கார்ல் லெவின் கூறியுள்ளார்.

வடகொரியாவின் அணுஆயுதப் பரவல் நடவடிக்கைகள் விடயத்தில் பலதரப்பு பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா விரும்புகிறது. எனவே மற்ற நாடுகளின் ஆதரவு வடகொரியா, ஈரான் விடயத்தில் அமெரிக்காவிற்குத் தேவைப்படுகின்றது என்றார் அவர்.

ஈராக் மீது போர் தொடுப்பதானால் புஷ் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார் அது ஏனைய நாடுகளுக்கும் சேர்ந்ததாகவே இருக்கும். இந்த உரை எப்போது நடைபெறும் என்று தெரியவில்லை.

போருக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஈராக் மீதான போர் தொடர்பான ஒரு தேசியக் கொள்கையை உருவாக்கும் நோக்கத்துடன் நேற்று இந்தியத் தலைநகரில் சர்வகட்சி மாநாடு ஒன்றை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நடத்தியுள்ளார்.

### அமெரிக்காவின் சக்தி

ஈராக் மீது போர் தொடுப்பது தொடர்பான ஐ.நா.பாதுகாப்புச் சபையில் பயன்படுத்தப்படக் கூடிய அமெரிக்காவின் மிகச்சக்திவாய்ந்த ஒரு ஆயுதம் பணம் என்று கருதப்படுகின்றது. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் மிகவும் அவசரமாகப் பணம் தேவைப்படும் நாடுகள் அமெரிக்காவின் பக்கம் சாயக்கூடும்.

காலம் நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் இன்னமும் எந்தப் பக்கமாக நிற்பது என்று தீர்மானிக்காது இருக்கும் நாடுகளை தமது பக்கம் ஈர்க்கும் நடவடிக்கையில் அதிபர் புஷ் தனிப்பட்ட முறையில் தாமே ஈடுபட்டிருக்கின்றார்.

பல்கேரியா ஒரு காலத்தில் ரஷ்யாவுடன் கூட்டுச் சேர்ந்திருந்தது. சோவியத் யூனியன் தகர்ந்த பிறகு அமெரிக்காவின் தயவு அதற்குப் பெரிதும் தேவைப்படுகின்றது. ஏற்கனவே அமெரிக்காவிடம் பல வர்த்தக சலுகைகளை பல்கேரியா பெற்றுள்ளது.

அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பதென ரஷ்யா தீர்மானித்திருந்த போதிலும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பாதிப்புக்கள் பற்றி கடைசி நேரத்தில் ரஷ்யா தீர்மானிக்கக் கூடும் என்றும் கருதப்படுகின்றது.

சோவியத் யூனியன் காலத்தில் இருந்து வந்த வர்த்தகக் கட்டுப்பாடுகளை நீக்கும் படி ரஷ்ய அதிபர் புட்டீன் கோரி வந்துள்ளார்.

**ரமேஸ்**

பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் மிக முக்கிய நட்பு நாடாக இருந்து வருகின்றது. உதவிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாராளமாகக் கிடைத்து வருகின்றன.

கமரூன், கினி ஆகிய நாடுகளும் அமெரிக்க வர்த்தக சலுகைகளை அனுபவித்து வருகின்றன. அமெரிக்காவிற்கு ஆதரவாக நடந்து கொள்வதன் மூலம் இன்னும் அதிக பலன்களை இவை அமெரிக்காவிடம் இருந்து பெற முடியும்.

## திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பாராமுகப் போக்கைக் கண்டித்து கவன ஈர்ப்புப் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்திரைக்கலைவளர்ச்சிக்கு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் காட்டிவரும் பாராமுகத்தைக் கண்டித்து பாராளுமன்றத்தில் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர விருப்பதாக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சலன சித்திரம்-யாழ்ப்பாண அமைப்பின் நிர்வாகத்தினருடனான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் சலன சித்திர யாழ். செயலகத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு கருத்துரையாற்றிய சிவாஜிலிங்கம் எம்.பி. இவ்விதம் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில், கல்வி, மனிதவள, கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சருடன் சலனசித்திரம் அமைப்பு விடயங்கள் குறித்து விளக்குவதற்கு ஒரு சந்திப்பை ஒழுங்கு செய்வதாகவும்-

பன்முகநிதி ஒதுக்கீட்டில் தன்னாலான அதிகபட்ச உதவியை அமைப்புக்கு செய்வதாகவும் வருங்காலத்தில் வேறும் பலஉதவிகள் செய்ய இருப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

ஒரு சமூக அமைப்பாக இயங்கி வரும் சலன சித்திரமும், விடுதலைப் புலிகளின் நிதர்சனமும் தான் தமிழ் சினிமாவின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளன.

சிங்கள பேரினவாதத்தின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட எமது கலைகளின் வளர்ச்சிக்காகவும், கலாசார சீரழிவுக்கு எதிராகவும் கலைச் சங்கங்கள் வேலை செய்ய வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டிப் பேசினார். (உ)

## வாய்ச்சுகாதாரம் குறித்து மாணவரிடையே ஆய்வு

(சுதுமலை)

சுகாதார சுதேசிய மருத்துவத் துறை அமைச்சினால் யாழ். குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் வாய்ச்சுகாதாரம் மற்றும் பல், முரசு நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இதன்பிரகாரம் நாளை வியாழக் கிழமை முதல் பல்வைத்திய அதிகாரிகளைக் கொண்ட குழு மூலம் 1, 8, 11 ஆம் தரங்களில் கல்வி கற்றுவரும் மாணவர்களை ஆய்விற்கு உட்படுத்தவுள்ளதாகவும்,

எனவே மேற்படி வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களின் பெயர் விபரப் பட்டியல்களை பாடசாலைகளில் தயாரித்து வழங்கும்படியும் அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-252)

### தினசரி தியானம்

## சாந்தநிலை

விசாலமான இதயத்தைக் கொள். மனதை ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்திக் கொண்டேயிரு. மனதின் குறைபாடுகளை அகற்று. இந்திரியங்களை வெளியில் செல்ல விடாது அடக்கு. பெண்களை வெறுக்காதே. ஆனால் காமத்தை அறவே வெறு. மோன நிலையில் தெய்வ இரகசியத்தைக் கேள். அறியாமை என்னும் தூக்கத்தினின்றும் எழுவாய். சத்சங்கத்தில் சேர்ந்து நீ பெரும் சாந்தி பெறுவாய். இறைவனிடம் சரணடைந்து பரமசாந்த நிலையை எய்துவாய்.

**சுவாமி சிவானந்தர்**

## தவக்கால நற்சிந்தனை

**“கடவுளே நொறுங்கிய குற்றமுள்ள உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை”**

விசுவசிப்பவனுக்கு அடையாளங்கள் தேவையில்லை. விசுவாசம் இல்லாதவனுக்கு எத்தகைய அடையாளங்களைக் கொடுத்தாலும் அவன் விசுவசிக்கப்போவதில்லை. இயேசுவின் மீட்பை விசுவசிக்கும் நாம் பழைய ஏற்பாட்டில் அவரைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் அடையாளங்களை ஏற்றுக் கொள்கின்றோம். யோனாவின் போதனையை விடவும், இயேசுவின் போதனை உயர்ந்தது என நம் விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்கின்றோம். இயேசுவில் விசுவாசமில்லாத பரிசேயர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை அடையாளங்கள் கேட்டு சோதிக்கின்றார்கள். நாமும் இறைவனிடம் அடையாளம் கேட்கின்றோமா? தீர்ப்பு நாளில் இக்கேள்விக்கு நாம் பதில் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**காவலன்**

**பதினொரு.....**

நீதிமன்றின் பெயர்ப் பலகையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப் பினர் வே.பாலகுமாரன் திரை நீக்கம் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்ற பெயர்ப் பலகையை தமிழீழ கல் விக்கழகப் பொறுப்பாளர் வே.இளம் குமரன் திரைநீக்கம் செய்து வைத் தார்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழீழ நீதிமன்ற வளாகத்தின் நாடவை வெட்டித் திறந்து வைத்து உரையாற் றும் போது கூறியதாவது;

**ஆத்திரமூட்டும் செயலில் படையினர்**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த உடன் படிக்கை ஏற்பட்டபின்ன பல ஆத்திரமூட்டும் சம்பவங்களில் படைத் தரப்பினர் ஈடுபட்டிருந்தனர்.அப்போ தெல்லாம் நாம் மிகவும் பொறுமை யாக இருந்தோம். கடந்த ஒரு வருட காலமாக எத்தனையோ முட்டுக் கட்டைகளுக்கு மத்தியிலும்,தடை களின் மத்தியிலும் நாம் நிதானம் இழக்காமல் யுத்த நிறுத்தத்தைப் பேணி வந்திருக்கின்றோம்.

அம்பாறையில் 9பொது மக்கள் கொல்லப்பட்டும்நெடுந்தீவில் 3 போராளி களை இழந்தும்,மாணிப்பாயில் பெண் போராளிகள் மிருகத்தனமாக தாக் கப்பட்டும் இப்போழுது 11 போராளி கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

எனினும்,நாம் அமைதியாக இருக் கின்றோம். இச் சம்பவங்களுக்காக நாம் போருக்குத் தயாராக வில்லை. எந்தளவுக்கு எம்மால் பொறுமையை காக்கமுடியுமோ அந்தளவுக்கு நாம் பொறுமையைக் காப்போம்.எமது பக்கமே நியாயம் இருக்கின்றதுஎன பதனை சர்வதேச உலகிற்கு உணர்த் துவோம்.

**அரசு இராணுவத்தை நவீன மயப்படுத்துகிறது**

யுத்த நிறுத்த உடன் படிக்கையின் பிரகாரம் இருதரப்பும் இராணுவ சம நிலையைப் பேணவேண்டும் என்று நாம் கூறவில்லை. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரே இதனைக் கூறுகின்றார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்க ளுடன் நடமாட முடியாது.ஆயுதங் களை இறக்க முடியாது.ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஆயு தங்களை நகர்த்த முடியாது. கட லில் சுதந்திரமாக நடமாட முடியாது. ஆனால் அரசாங்கம் மட்டும் பாதுகாப்புச் செலவீனத்தைக் குறைக்காமல் 5 ஆயிரம் கோடி ரூபாவுக்கு அரசு ஆயுதம் கொள்வனவு செய்துள்ளது. யுத்த நிறுத்த காலத்தில் அரசு இரா ணுவத்தை நவீன மயப்படுத்துவதற்கு நவீன ஆயுதங்களை,பீரங்கிப்படகு களை கொள்வனவு செய்து வருகி றது.

ஆயுதக் கொள்வனவுடன் மட்டும் நில்லாது,அமெரிக்கா,இஸ்ரேல்,பாகிஸ் தான்,இந்தியா போன்ற நாடுகளில் இலங்கை இராணுவத்திற்குப் பயிற் சியும் இடம் பெற்று வருகிறது.

இராணுவ சமநிலை தொடர்பாக தலைவர் பிரபாகரனும் நானும் கண் காணிப்புக் குழுவின் பதவி விலகிச் செல்லும் தலைவருடனும் புதிய தலைவருடனும் 2மணித்தியாலங் கள் வரை பேசியுள்ளோம். இதேவேளை யுத்தநிறுத்தக் காலத்தில் புலிகள் இராணுவ பலம் பெற்றுவருவதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின் றனர்.

**அமெரிக்கா,இந்தியா பின்னும் சிலந்தி வலைக்குள் சிக்க மாட்டோம்**

விடுதலைப் புலிகள் இயக்கத்தை யும் தமிழர் தாயகத்தையும் சுற்றிப் பாதுகாப்பு சிலந்தி வலைஒன்று பின்னப் படுகிறது.இச் சிலந்தி வலைப் பின்லல் இந்தியாவினதும் அமெரிக்காவி னதும் பங்கு எத்தகையது என்பது எமக்குத் தெரியும்.நாங்கள் என்றும் முட்டாள்களாக இருந்தது கிடை யாது.சமாதானப் பாதையில் நாம் உறுதியாக உள்ளோம். இன்றைய சமாதானச் சூழல் எமக்கு சிலந்தி வலைப் பொறியை உருவாக்குகிறது. அதற்கேற்ப நாம் விழிப்பாக இருக் கின்றோம்.மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். சமாதானத்தை ஒருபோதும் இழக்க மாட்டோம். சிங்களப்பேரினவாதிகளும்,பத்திரி கைகளும் என்ன கூறினாலும் சரி மக்கள் விரும்புகின்ற சமாதானத்தை குழப்ப மாட்டோம் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.(ம).

**புலிகளின் அரசியல....**

மன்னாரில் அரசியல் நடவடிக்கை யில் ஈடுபட்ட விடுதலைப் புலிப் போராளிகளுள் 30பேரும் வவுனியா வில் இருந்து 100பேரும் யாழ்ப்பா ணத்தில் இருந்து 200 க்கும் அதிக மானோரும் வன்னிக்கு திரும்பிச் சென்றுள்ளதாகவும்,யுத்த நிறுத்தக் கணகாணிப்புக்குழுவின் பிரதித் தலை வர் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார். (வ)

**கைதிகளை..**

அ.விநாயகமூர்த்தி எம்.பி நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையை அடுத்தே தமிழ் அரசியல் கைதி களை தமிழ்ப் பகுதிகளிலுள்ள சிறைகளுக்கு மாற்றுவதற்கு பத்துத் தினங்களுக்குள் நட வடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் கமலசபேசன் உறுதி அளித்திருப்பதுடன் குறைந்தது பத்துக் கைதிகளையாவது விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.(வ)

**கடற்படை..**

வழிமறித்துள்ளதாக எங்களுக்குத் தகவல் வந்தது. அது குறித்து நாம் கிளிநொச்சிக்குத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்கள் இது போன்ற கப்பல் வந்திருப்பதாக தங்களுக்குத் தெரியாதெனக் கூறினர்.

ஆனால் நண்பகல் 12 மணிக்கு அவர்களே தங்களுடைய கப்பல் ஒன்று கடற்படைக் கப்பலுடன் மோதல் நிலையில் இருப்பதாகக் கூறினார்கள்.

திருகோணமலைச் சம்பவம் குறித்து அரசபடைகள் முதலில் எமக்குத் தகவல் தருகையில், இந்தச் சம்பவம் இலங்கைக் கடற்கரைக்கு 240 மைல்களுக்கு அப்பால் நடந்ததாகக் கூறியது. பின்னர் 220 மைல் என்றார்கள். பின்னர் அவர்களிடமிருந்து 185 கடல் மைல்களுக்கு அப்பால் இது நடந்ததாக எழுத்து மூலமான அறிக்கையொன்று வுந்தது. இதனால் இச்சம்பவம் எங்கு நடந்ததென அறிய நாங்கள் விரும்புகின்றோம்.

இலங்கையின் பொருளாதாரக் கடற்பரப்பு என்பது கடற்கரைக்கு அப்பால் 200 கடல் மைல் தூரம்தான். இந்த எல்லைக்குள் நடந்தால் இலங்கைக் கடற் படை யின் நடவடிக்கை சட்டப்படி சரியா எனத் தீர்மானிக்கும் விடயத்தில் அது கொஞ்சம் தாக்கம் செலுத்தும்.

ஆனால் இதுமட்டும் ஒரு காரணமல்ல. மற்றொரு விடயம் புலிகளின் கப்பல் ஏதாவது தேசியக் கொடியுடன் வந்ததா என்பது தான். அது, ஏதாவது ஒரு கொடியுடன் வந்திருந்தால் புலிகளின் சட்ட ரீதியாக சற்று மேம்பாட்டு நிலையில் இருப்பார்கள் என்று கூறினார். (இ-5)

# முல்லைக் கடல் மோதல் சம்பவம் கடல் சட்டத்தை மீறும் செயல்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் இலங்கை கடற்படையினருக் கும் இடையே முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதல் சம்பவம் சர் வதேச கடல் சட்டத்தை மீறும் நட வடிக்கை என்று பாதுகாப்பு அமைச் சர் திலக்மாரப்பன தெரிவித்துள் ளார்.

முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப் பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு தயக்கம் காட்டியதால் தமிழீழ விடு தலைப் புலிகளின் கப்பலை தாக் குமாறு கடற்படையினருக்கு ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்கா உத்தரவிட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டமொன்றில் தெரி வித்ததையும் அமைசசர் நிராகரித் துள்ளார்.

மேலும்,தமிழீழ விடுதலைப் புலி கள் தகர்க்கப்பட்ட கப்பலில் ஆயு தங்களைக் கொண்டு செல்வதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து அக் கப்பலை கடற்படையினர் சுற்றி வளைத்தனர்.

அப்போது ஏற்பட்ட பிரஸ்தாப துப்பாக்கிச் சமரில் அக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது என்று குறிப்பிட் டுள்ளார்.

இவ்விடயத்தில் யுத்தநிறுத்த உடன் படிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு கடற்படைத் தளபதி தயாசந்தகிரிக்கு உத்தரவிட்டதாக வும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும்,தமிழீழ விடுதலைப் புலி களின கப்பல் ஆயுதங்களுடன் இருந் தமை உறுதிபபடுத்தப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தனக்கு அனுப்பி வைத் துள்ள கடிதத்திற்கு விரைவில் பதில கடிதம் அனுப்பவுள்ளதாகவும்,அத் துடன் இத்தகைய சம்பவங்கள் மீண டும் இடம் பெறாதிருப்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதி செய்து அறிவிக்குமாறு இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் கோரவுள்ளதாகவும் தெரிவித்தார். (உ-8)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நுளம்புத் தொல்லையக் கட்டுப் படுத்தி டெங்கு நோயினை ஒழித்தல், மற்றும் முன் பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி போன்ற விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு கொக்குவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலைய நிர்வாக உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் ஆகியோரை இக் கலந்துரையாடலுக்கு சமுகமளிக் குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தமது பிரதேசத்தில் நுளம்பைத் தோற்றுவிக்கும் இடங்கள் தொடர்பான விபரங்களையும் அன்றைய தினம் சமர்பிக்குமாறு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார் (உ-10)

*********

(யாழ்ப்பாணம்)

கட்டட விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது தொடர் பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு நல்லூர் பிரதேச சபையில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கொக் குவில்,கோண்டாவில்,நல்லூர் பகுதி களுக்கு பொது சுகாதாரப் பரிசோ தகர்கள் மற்றும் பதிவு செய்யப் பட்ட படவரைஞர்கள் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் பொறுப்பதிகா ரிகள் விடய எழுதுநர்கள் ஆகியோ ரைச் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

**புலிகளின்...**


,பீடத்தைச் சந்தித்துப் பேசுவது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு நோர்வேத் தூதரகத்துடன் கோரிக்கை விடுத்துள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் மக்கள் தனித்தரப்பாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது தொடர்பாக ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை கோருவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் முஸ்லிம் பாராளுமன்ற குழு ஒன்றியத் தலைவர் அமைச்சர் நூர்தின் மசூர், அமைச்சர் ரவூப் ஹக்கீம், எம்.பிக்களான பேரியல் அஸ்ரப், எச்.என்.எம்.ஹரிஸ், தௌபீக் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (வ)



யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் அமைதிப் பேரணிக் காட்சிகள்..



காரை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தின் போது கல்வி அமைச்சர் உரையாற்றுவதையும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,கல்லூரி அதிபர் மு.சு.வேலாயுபிள்ளை ஆகியோர் காணப்படுகின்றனர். படம்:ப.ஐங்கரன்.

**ஆயிரம்...**

ஆசிரியர்களை நியமிக்க திறை சேரியிடம் அனுமதி கோரியுள் ளோம். அதன் அடிப்படையில் இம்மாத இறுதியில் வர்த்தமானியில் பிரசுரித்து,க.பொ.த உயர் தர பரீட்சையில் சித்தியெய் தியவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படவுள்ளன.அதன் போது தொண்டர் ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று கூறி னார்.

இதேவேளை,கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், சகிதம் யாழ். வந்த கல்வி அமைச்சர்,குடா நாட் டுப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து, அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் பாடசாலை நிகழ்வுகளிலும் கலந்து கொணடார்.அமைச்சருடன் இந்து கலா சார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். வலயத்தைச் சேர்ந்த வலயக் கல் விப்பணிப்பாளர்கள் ஆகியோரும் பாடசாலைகளுக்கு விஜயம் செய் திருந்தனர். (இ-246)


**மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம்**

இராவணேஸ்வரனாலும் தம்பி விபீஷணச் சக்கரவர்த்தியாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகோடி சிவலிங்கங்களுள் ஒன்றான

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம் 19.03.2003 புதன் காலை 6.30-7.30 க்கு இடையில் நடை பெறும்.கும்பாபிஷேக முதல் நாள் 18.03.2003 செவ்வாய்க்கிழமை 2மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்பு சாத்தலாம்.அன்று சுவர்ண பந்தனத்தை பார்வையிடலாம்.

காலை 6மணியில் இருந்து போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருப்பணிக்கு நிதி உதவுக.

ஸ்ரீலஸ்ரீ.சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்

அறங்காவலர்

(C/5831)



**11.03.2003-அதிர்ஷ்டசாலி இல.39**

க.லோகேஸ்

**பிரணகா நகைத் தொழிலகம்**

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**JASO PLASTIC (PVT)LTD.**

35,Kannathiddy Road,Jaffna.

(6810) T.P: 0777-110610


## மரண அறிவித்தல்

### திருமதி T.விக்டோரியா அன்னரெட்னம்

திருமதி T.விக்டோரியா அன்னரெட்னம் 10.03.2003 திங்கள் அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.அன்னார் ஜஸ்மினின் அன்புத் தாயாரும பாலகிருஷ்ணராஜாவின் (BALI) மாமியாரும்(நிலஅளவையாளர்),ஜெவ்றி,ஜெரால்ட் ஆகியோரின் பாட்டியும்,கானான் ஜெப ஆலய வண.பிரதம போதகர் அல்பேட் ஜெபநாயகம் அவர்களின் சிறிய தாயாரும் வண.பிதா போதகர் ஏபிரகாமின் மாமியாரும் அத்துடன காலம் சென்ற ரோசலின் வல்லிபுரம்,அருட்திரு.சகோதரி செப்பாக்கியம்தம்பு(C.P.M)திரவியம் சுப்பிரமணியம், தங்கரெட்ணம் தம்பு ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்க ஆராதனைக்காக இன்று பிற்பகல் (புதன்)3மணிக்கு கானான் ஜெப ஆலயத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4மணிக்கு இராச வீதி,கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல:
போதகர் ஏபிரகாம்

செல்வமஹால்
இருபாலை, கோப்பாய்.

(6809)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.